www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

கண்ணோட்டம் KANNODDAM

வெளியீடு-59 மார்ச் - ஏப்ரல் 2011 விலை: 10.00

# தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுக்கு அன்பான வேண்டுகோள்


வீ.ஆனந்தசங்கரி


அடைக்கலநாதன்


மாவை சேனாதிராஜா


சிவாஜிலிங்கம்


த.சித்தார்த்தன்


சுமந்திரன்


இரா.சம்பந்தன்

**தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடக்கு கிழக்கில் 12 உள்ளூராட்சி சபைகளில் வெற்றி பெற்றிருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சியை பின்னுக்குத் தள்ளி தமிழ் தேசிய கூட்டமைப்பு முன்னுக்கு வந்துள்ளதாக தமிழ் ஊடகங்கள் எழுதுகின்றன.**

**தமிழ தேசிய கூட்டமைப்பிற்கு மக்கள் பரவலாக வாக்களித்திருக்கிறார்கள் என்பது உண்மையே. ஆனால், பெரும்பாலாகவோ, முழுமையாகவோ வாக்களிக்க வில்லை என்பதை தமிழ் தேசிய கூட்டமைப்பினர் கருத்தில் கொள்ளவேண்டும்**

வன்னியில் 40 வீதமானவர்களே வாக்களித திருக்கிறார்கள். ஆலையடிவேம்பு ,நாவிதன் வெளி ,மன்னார் நகரசபைப் பகுதிகளில் எதிரணி யினர் பெற்றவாக்குகளின் கூட்டுத்தொகை தமிழ் தேசியகூட்டமைப்பிற்கு விழுந்ததை விட அதிகமாகும்.

தற்போது தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறது. இப் பேச்சுவாத் தைகளில் முன்னேற்றங்கள் இருப்பதாக சுரேந்திரன், சுமந்திரன் ஆகிய தமிழ் தேசிய

கூட்டமைப்புத் தலைவர்கள் தெரிவிக்கிறார்கள். இவை மக்களுக்கு இனிப்பான செய்திகளாகும்.

இன்ன இன்னவிடயங்களில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று வெளிப்படையாகத் தெரிவித்தால் உற்சாகமான மனநிலை ஒன்றை மக்களிடம் ஏற்படுத்தலாம்.

ஏனெனில், மக்கள் மத்தியில் பரவலான விரக்தி நிலை ஒன்று காணப்படுகிறது.

எங்களைப் போன்றவர்களும் அறிய ஆவலாக இருக்கிறோம் ஏனெனில் கடந்த 30 வருடங்களாக எதிர்பார்த்து எதிர்பார்த்து கண் பூத்துப்போச்சு.

பல ஆயிரக்கணக்கானவர்கள் தமிழ் மக்கள் அரசியல் உரிமைபெற்று வாழவேண்டும் என்ற கனவுடன் மரணித்து விட்டார்கள்.

2 சுற்றுப் பேச்சுவாத்தைகள் நடந்து விட்டதாக அறிகிறோம் .அடுத்த சுற்றுப் பேச்சுவாத்தைகள் திருப்பு முனையாக அமையலாம் என்பதையே சுமந்திரன் த.தே.கூ போன்ற தலைவர்களின் கருத்துக்கள் கோடி காட்டுகின்றன.

வாத்தைகளில் வர்ணிக்கமுடியாத துன்பத்தில் வாழும் மக்களுக்கு நிரந்தர சமாதானம் அரசியல் உரிமைகள் கிடைக்கப்போகிறது என நினைக் கும் போது நிம்மதி உணர்வு ஏற்படுகிறது.

(தொடர்ச்சி 3 ம் பக்கம் பார்க்க)

# நாம் என்ன செய்ய வேண்டும்

இலங்கையில் உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் சிங்கள தமிழ் தேசிய உணர்வுகளைப் பிரதிபலிப்பதாகவே இருக்கின்றன என்பதை யாரும் நிராகரித்து விட முடியாது.

இதில் தமிழ் மக்களின் தேர்வு தாம் இந்த நாட்டில் இரண்டாந்தரப் பிரசைகளாக வாழ்கி றோம் என்ற எண்ணத்தை பிரதிபலிப்பதாகவே அமைகிறது.

அரசியல் முறையில் பங்கின்மை, படையினரின் பிரசன்னத்தின் மத்தியில் வாழ்வு ,தாம் இழந்த இழப்புக்களுக்கு நிகராக எந்த சமூக மீள் எழுச் சிப் பணிகளோ அபிவிருத்திப் பணிகளோ மேற் கொள்ளப் படவில்லை என்ற விரக்தி நிலை விசனம் மக்கள் மத்தியில் காணப்படுகிறது.

ஆழ்ந்த அதிருப்தி தமிழ் தேசிய கூட்டமைப பிற்கு வாக்காக அளிக்கப்பட்டிருக்கிறது. மற்றப படி விமோசனம் கிடைக்கும் என்று அவர்கள் நம்பவில்லை.

மக்களின் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு தீர்க்க தரிசனமும் பரந்துபட்ட எண்ணமும் அர்ப் பணிப்புணர்வும் கொண்ட ஐக்கியப்பட்ட செயற் பாடு தேவைப்படுகிறது.

அது தமிழ் சத்திகளை மாத்திரமல்லாமல் மலை யக, முஸ்லீம் அதிகாரப்பகிர்வை ஆதரிக்கும் தென்னிலங்கை முற்போக்கு, ஜனநாயக சத்தி களையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

தேசிய இனப்பிரச்சனை மாத்திரமல்லாமல் தமிழ் சமூகத்தில் நிலவும் பெண்ணடிமைத்தனம் ,தீண் டாமை, பிராந்திய மேலாதிக்க உணர்வு ஆகிய வற்றையும் களைந்ததாக அமைய வேண்டும்.

ஒருவரை ஒருவர் வெட்டி ஓடுவது, குறுக்கறுப்பது என்றில்லாமல் வேறுபாடுகள் ,தனித்துவங்க ளைப் புரிந்து சமூக முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளில் இணக்கப்பாட்டுடன் செயற்படு வதாக அமைய வேண்டும்.

கடந்து வந்த 30 வருடங்களில் தமிழ் மக்களின் உழைப்பும், தியாகமும் விரயமாகியதை பாட மாக எடுத்துக் கொண்டு செயற்படவேண்டும் .குறிப்பாக தமிழ் மக்களும் இலங்கையின் சகல சமூகங்களும் அனுபவித்த துன்பங்களை கருத் திற்கெடுப்போம்.

நானே ராசா, நானே மந்திரி என்ற அகங்காரம் இல்லாமல் செயற்பட வேண்டும் .இவை எமது அவை அடக்கமான வேண்டு கோள்கள்.

நாம் எல்லாவற்றையும் தற்காலிகமாக ஒதுக்கி வைத்து விட்டு அனைவரும் எமது சமூகத்தைப் பற்றிச் சிந்திப்போம்.

# உலக மானிடத்தின் கடமை

- சுகு -

யப்பானில் ஏற்பட்ட நிலைமை நாளை யாருக் கும் நேரலாம். ஏன் இலங்கையர்கள் நாம் அனுப விக்கவில்லையா? 2004 டிசம்பர் சுனாமி ஏற்பட்ட போது முழு உலகமும் எமக்கு உதவ முன்வந்தது.

ஆனால், இன்று யப்பானியர்கள் பூமியதிர்ச்சி, சுனாமி, அணுகதிர் வீச்சு என அத்தனை துன்பங் களையும் அனுபவிக்கிறார்கள்.

ஆனால், நாடுகள் தங்கள் தங்கள் நாட்டு பிர ஜைகளை அழைத்துக் கொள்வதில் கடுமை யான சிரத்தை எடுத்துக் கொள்கிறார்கள் அது தவறென்றில்லை.

ஆனால், நரகத்தை விட்டு சக மனிதர்கள் வெளி யேறுகிறார்கள் என்ற எண்ணம் யப்பானிய மக் களுக்கு வரக் கூடாது. இந்த இடத்தில் தேச எல்லைகள் கடந்து சிந்திக்க வேண்டும் .

இந்த அனர்த்தத்தை எமக்கு நேர்ந்ததாக எடுத் துக் கொண்டு முழு உலகமும் ஒன்றாக அமர் ந்து பேச வேண்டும். ஒன்றாக துரித கதியில் செயற்பட வேண்டும்.

உலகம் ஒன்று சேர்ந்து துரித கதியில் செயற் பட்டால் இந்த அணுக் கதிர் வீச்சை நிறுத்து வதென்பது முடியாத காரியமல்ல.

அணு உலையை குளிர்விக்க ஹெலிகொப்டர் களிலிருந்து தண்ணீர் ஊற்றுகிறார்கள் தற்போது யப்பானிய தொழில் நுட்பவியலாளர்கள் குளிரூட் டும் பம்பியின் வயரைக் கண்டுபிடித்திருக்கி றார்கள்.

இந்த காரியங்களில் உலகத்தவரும் உதவலாம். சில மணித்துளிகளிலேயே தீர்வுகாணலாம்.

(தொடர்ச்சி 3 ம் பக்கம் பார்க்க)

# தோழர் இந்திரன் வாழ்வும் மரணமும்


மயில்வாகனம் ரவீந்திரன்

**தோ**ழர் இந்திரன் கடந்த 15.04.2011 அன்று சென்னையில் இயற்கை மரணம் எய்திய செய்தி நெஞசத்தை நெகிழச் செய்து, கண்களை கசியச் செய்தது. தனது 52வத வயதில் எம்மை விட்டுப் பிரிந்தது துயரம் மிக்கதாகும்.

சாவகச்சேரி, நுணாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட தோழர் இந்திரன் ஈபிஆர்எல்எவ் இன் இராணுவப் பிரிவான மக்கள் விடுதலைப் படை யின் ஆரம்பகால உறுப்பினராவார். மக்கள் விடுதலைப் படையின் பிராந்தியக் கமிட்டி உறுப்பினர்களில் ஒருவரான அவரது அரம்பகால செயற்பாடுகளும், துணிச்சலான போக்கும் ஈபிஆர்எல்எவ் மக்கள் மத்தியில் கால் ஊன்றுவதற்கும், ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பு ரீதியாக பலம்பெறுவதற்கும் ஆதாரமாய் அமைந்தவை.

(தொடர்ச்சி 9 ம் பக்கம் பார்க்க)


அமைச்சர் கருணாவிற்கு கடிதம்

பக்கம்- 03

பிரான்ஸ் இலக்கியச் சந்திப்பு

பக்கம்- 04

அபிமன்யு பதில்கள்
பக்கம்- 05

சர்வதேச பெண்கள் தினம்
பக்கம்- 06

தெளிவற்ற பாதையில் பேச்சுக்கள்
TNA Tamil National Alliance தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
பக்கம்- 09

www.padippakam.com



# கண்ணோட்டம்
Kannoddam



## சர்வதேச அரங்கில் நிகழும் மாற்றங்களும் இலங்கையும்

வட ஆபிரிக்காவிலும், மத்திய கிழக்கிலும் ஜனநாயக மாற்றதிற்கான மக்கள் எழுச்சிகள் நடைபெறுகின்றன.

ஆனால், இவை பற்றி ஆழமான அவதானிப்பு அவசியம். அவற்றின் சுயாதீனத்தன்மையை கருத்திற்கெடுப்பதோடு அதி கூடியபட்ச அனுசரணையையும் உலகம் வழங்குதல் வேண்டும்.

ஏனெனில் இவை நீதிக்கான மக்கள் ஜனநாயக எழுச்சிகள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

மேற்கத்திய வட அமெரிக்க வல்லரசுகள் தமது அரசியல் பொருளாதார நலன்களிலிருந்து பிரச்சனைகளை அணுகுகையில் சேற்றில் கால்புதையுண்டது போன்ற நிலை ஏற்படுகிறது.

வியட்னாம், ஆப்கானிஸ்தான், ஈராக் தற்போது லிபியா வரை இது தான் பிரச்சனை.

சமகால உலகில் எந்த நாட்டிலும் இராணுவ வகைப்பட்டதும் ஆயுட் பரியந்தமானதுமான ஆட்சி முறைமையினை ஊக்குவிக்கக் கூடாது.

ஆந்த ஆட்சியன் காலாவதியான அளவு கடந்த மையப்படுத்தலுக்கு நேர்மாறாக மக்களுக்கு கூடுதலான அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் கட்டமைப்புக்கள் தேவைப்படுகின்றன.

பிரபுத்துவ பாணி ஆட்சிகள் அதிகாரம் ஏதுமற்ற சம்பிரதாயமாக இருப்பது வேறு அல்லது தொல்பொருட் காட்சியகங்களில் இருப்பது வேறு.

ஆனால் நடைமுறைக்கு அவை ஒவ்வாதவை. சமகால உலகில் மக்களின் சுதந்திரம், தனிமனித சுதந்திரம், ஜனநாயகம், பொருளாதார வளங்களின் சமபங்கீடு என்பனவே பிரதானமானவையாகும்.

சீர்திருத்தம் புரட்சிகரமாற்றங்கள் பல நாடுகளுக்குத் தேவை.

பௌத்த சிங்கள நாடு என்பதற்கு மாற்றாக இலங்கை பல்லினங்களின் நாடாக கட்டியெழுப்பப்படவேண்டும். அதுவரைக்கும் நாடு உருப்படுவது கஸ்டத்திலும் கஸ்டம். ஒரு அதிசயமும் நடக்காது

உலகத்தில் மக்களின் எழுச்சி எதை நோக்கி இருக்கின்றன என்பதை நாம் உணரவேண்டும்.

மக்கள் சுதந்திரமான வாழ்க்கையைக் கோருகிறார்கள். அதற்கு மேலான ஒன்றில்லலை என்று வீதிகளில் நின்று அறுதியிட்டுக் கூறுகிறார்கள்.

மக்களின் சுதந்திரமான வாழ்க்கை, ஜனநாயக உரிமைகள், மனித உரிமைக்கெதிரான இராணுவமயப்பட்ட சாசுவதமாக பதவியிலிருக்கும் ஆட்சிகளும் இனிமேல் உலக வரைபடத்தில் காலவதியாக்கப்பட வேண்டும்.

இதற்காக சர்வதேச அளவில் சுதந்திரம் சமத்துவத்தில் அக்கறையுள்ள அரசுகள் - மக்கள் இணைந்து செயற்பட வேண்டும். சர்வதேச அரங்கங்களினூடாக இவை உறுதியுடன் முன்னெடுக்கப்பட வேண்டும்.

காலநிலை மாற்றம், புவி வெப்பமடைதல், சுனாமி, அடிக்கடி உலக நாடுகள் பலவற்றில் நிகழ்ந்த பூகம்பங்கள் சீனா, பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான், நியூசிலாந்து, சிலி உட்பட காட்டுதீ அவுஸ்திரேலியா, அமெரிக்கா, ஐரோப்பாவில் நிலவிய நீண்ட குளிர் காலம். ரஷ்சியாவில் திடீரென அதிகரித்த வெப்பம். எமது நாட்டில் அடுத்தடுத்து நிகழும் வெள்ளப்பெருக்கு, மண் சரிவு இவற்றையெல்லாம் அலட்சியம் செய்து விட்டு அர்த்தமில்லாத பிதற்றல்களில் ஈடுபட்டிருக்கிறோம்.

சமூகத் தளத்தில் ஜனநாயகமும் ,இயற்கைச் சவால்களை எதிர்கொள்ளும் தகைமையையும் நாம் பெற வேண்டிய தேவை இருக்கிறது.

யப்பான் பொருளாதார ஆற்றலில் உலகின் 3வது நிலையிலுள்ள நாடு. அதுவே திணறுகிறது. மக்கள் இழப்பு, கடும் குளிர், அணுக் கதிர் வீச்சு அபாயம், பசி இவற்றுடன் போராடுகிறார்கள்.

நிலைமை இவ்வாறிருக்கும்போது நாம் வீறாப்பு பேசிய படி வாழமுடியாது. புத்தி பூர்வமாக சமூக சாதகமாக முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

# வரலாறு படைக்கும் ஆபிரிக்க அரேபிய மக்கள்

வட ஆபிரிக்காவிலும் மத்திய கிழக்கிலும் சரித்திரம் கண்டிராத கிளர்ச்சிகள் நிகழ்ந்து வருகின்றன.

வட ஆபிரிக்க நாடான டூனிசியாவில் (Tunisia) ஆரம்பித்த கிளர்ச்சி என்ற பொறி பெருங் காட்டுத் தீ போல் பரவியுள்ளது.



தள்ளுவண்டியில் காய்கறி விற்றுக் குடும்பம் நடத்தும் ஒரு பட்டதாரி மீது பொலிஸ் அத்துமீறலை மேற்கொண்டதனால் அவமான உணர்ச்சி, கோபம், விரக்திக்காளான அந்த இளைஞன் தனக்குத்தானே தீமூட்டினான். இச்சம்பவம் டூனிசிய மக்களின் மனச்சாட்சியை உலுக்கியது . அவர்கள் தீயெனத் திரண்டு எழுந்னர்.

*1950களிலிருந்தே ஆட்சி சுக போகத்தை அனுபவித்துவந்த சர்வாதிகாரி பென் அலி (Ben Ali) அகப்பட்டதை சுருட்டிக் கொண்டு குடும்பம் உற்றசுற்றத்துடன் சவுதி அரேபியாவில் தஞ்சமடைந்தார்.*

*தற்போது அங்கு மக்களுக்கு பதில் சொல்லக் கூடிய ஆட்சி முறைச் சிர்திருத்தங்கள் நடைபெறுகின்றன.*

*டூனிசிய மக்கள் கிழர்ச்சியைத் தொடர்ந்து எகிப்து மக்கள் வீதிக்கிறங்கினார்கள்.*

*1980 இலிருந்து 30 வருடங்களுக்கு மேலாக சர்வாதிகாரியாக வீற்றிருந்த "ஹூஸ்னி முபாரக்கை (Hosni Mubarak) பதவி விலகுமாறு ஓங்கிக் குரல் எழுப்பினார்கள்.* வரும் செப்டெம்பரில் சீர்திருத்தங்களை செய்வேன் தேர்தல்களை வைப்பேன் என்று தகிடுதத்தங்கள் விட்டுக்கொண்டிருந்தார். எகிப்திய மக்கள் விடவில்லை. அவர் பதவியைவிட்டு இறங்க வேண்டும் போயே ஆக வேண்டும் என்று "தகீரீர்" சதுக்கத்தில் (Tahrir square) கடலெனத் திரண்டு நின்று குரல் எழுப்பினர்.

*அமெரிக்கா இந்தியா உட்பட உலகநாடுகளும் எகிப்திய மக்களின் ஜனநாயகக் குரலுக்கு ஹூஸ்னி முபராக் மதிப்பளிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.*



இப்போது முபராக் பென் அலி வழியில் போயேவிட்டார்.

பஹ்ரெய்னிலும், அல்ஜீரியா, யேமனிலும்(Yeman), ஜோர்டானிலும், லிபியாவிலும் கிளர்ச்சிகள் நடைபெறுகின்றன.

*லிபியாவில் கேணல் கடாபியின் (Col Gadafi) ஆட்சி மக்கள் கிளர்ச்சியை அரச வன்முறை கொண்டு அடக்க முற்பட்டபோது பல நூற்றுக்கணக்கான மக்கள் பலியாகியிருக்கிறார்கள். இதனால் பதில் வன்முறைகளும் எழுந்துள்ளன.*

*பொதுவாகவே இந்த மக்கள் எழுச்சிகளின் சிறப்பு என்னவென்றால் இங்கு வன்முறை வழியையோ, மத அடிப்படை வாதத்தையோ மக்கள் தேர்ந்தெடுக்கவில்லை.*

*வறுமை, வேலையின்மை ஜனநாயக சுதந்திர உரிமைகளை சர்வாதிகார அரசுகள் காலில் போட்டுமிதித்த செயற்பாடுகளால் மக்கள் விரக்தியுற்றனர்.*

*இந்நிலை சுதந்திர வேட்கையை பீறிட்டெழச்செய்தது.*

*இம்மக்கள் எழுச்சிகள் உலகின் சர்வாதிகார ஆட்சியாளர்களுக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும். அவர்கள் மனம் திருந்துவார்களா?*

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் வரவேற்கிறோம். அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:–

EPIC
PO BOX 431
SUTTON SM1 9LE
UK
email: eprlfp@yahoo.co.uk

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

29 A, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
065 2225179

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

310, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
021 2222022

159, கடல்முக வீதி
திருகோணமலை.
026 2227118

www.padippakam.com





இரா.துரைரட்ணம் (ரட்ணம்)
கிழக்கு மாகாண சபை உறுப்பினர்

# மக்களின் குறைகளை நிவர்த்தி செய்யுங்கள்

**அமைச்சர் கருணாவுக்கு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் தோழர் ரட்ணம் கடிதம்**

**தமிழ்** மக்கள் யுத்தத்தால் பாதிப்படைந்து சொல்லமுடியாத துன்பத்தை அனுபவிக்கும் வேளையில் யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டு நீங்கள் மீள்குடியேற்ற அமைச்சராக நியமனம் பெற்றதையிட்டு தமிழ் மக்களாகிய நாங்கள் சந்தோசமும் மகிழ்ச்சியும் அடைந்தோம்.

நல்ல பல பணிகள் தொடரும் என எண்ணினோம். நீங்களும் விடாமுயற்சியுடன் செயல்பட முனைந்தீர்கள். ஆனால், எமது மக்களின் பாதிப்புக்கு ஏற்றவாறு மீள்குடியேற்றப் பணி அமையவில்லை என்பதே எம் மக்களின் கருத்தாகும்.

கிழக்கு மாகாணசபையிலும் மீள்குடியேற்ற அமைச்சு உள்ளது. இதற்கு 2011 ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் எந்தநிதியும் மத்திய அரசால் ஒதுக்கப்படவில்லை. மேலும் அந்த அமைச்சிற்கு மீள்குடியேற்றம் தொடர்பான அதிகாரங்கள் இல்லை. இருந்திருந்தால் சம்பூர் மக்களின் பிரச்சினை தீர்ந்திருக்கும். இருந்தும் கீழ் குறிப்பிடப்படும் விடயங்களை தங்கள் கவனத்திற்கு கொண்டுவருகின்றோம்.

**கிழக்கு மாகாணசபையில் மீள்குடியேற்ற அமைச்சு ஒன்றை எவ்வித செயற்பாடுகளும் இல்லாமல் வெறும் பெயருக்கு மாத்திரம் வைத்திருப்பதன் காரணமென்ன என்று கேள்வி கேட்குமளவிற்கு தமிழ் சமூகம் இப்போது விழிப்படைந்துள்ளது என்பதை யாவரும் உணர்தல் வேண்டும்.**

*(1) 1986 ஆம் ஆண்டு பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கச்சைக்கொடி கிராம சேவையாளர் பிரிவில் கெவிளியாமடு கிராமத்தில் அண்ணளவாக 104 தமிழ் குடும்பங்கள் இடம்பெயர்ந்தன. அவைகளில் 30 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளன. இப்பகுதியில் 30 விவசாயிகள் தங்களது வேளாண்மை செய்கையை ஆரம்பித்துள்ளனர். ஏனையவர்களின் வயல் நிலங்கள் வேறு ஒரு சிலரால் செய்கை பண்ணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இங்கு மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கான தற்காலிக வீடு, நிரந்தர வீடு, தொழிலுக்கான உதவி, வயல்காணிகளை பெற்றுக்கொடுத்தல் போன்ற விடயங்கள் துரிதமாக செயல்படுத்தப்படவேண்டும் .*

*(2) 1989 ஆம் ஆண்டு மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வலையிறவு பாலத்தின் அருகில் பாரிய இராணுவ முகாம் அமைக்கப்பட்டதால் அங்கிருந்த 30 குடும்பங்கள் இடம் பெயர்ந்து அருகாமையிலுள்ள உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் வாழ்ந்து வருகின்றன. அக்குடும்பத்தவர்கள் மீளக் குடியமர்வதற்கு தயாராக உள்ளனர். அவர்களுக்கான வீட்டுத்திட்டம் விரைவாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் .*

*(3) செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஏறாவூர் தமிழ் பகுதியில் 1990 அம் ஆண்டு ஏற்பட்ட யுத்தம் காரணமாக 90 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர்ந்து ஏறாவூரிலும், அயற் கிராமங்களிலும், வெளிமாவட்டங்களிலும் உள்ள நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளன. அவைகளில் 55 குடும்பங்கள் ஏறாவூர் கிராமத்தில் மீண்டும் குடியேற தயாராக உள்ளன. இக்குடும்பத்தவர்களின் சொத்துக்கள் யாவும் அழிந்து போயுள்ளன. இவர்களுக்கான நிவாரணப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும்.*

*(4) இத்தோடு பாதிப்புக்குள்ளான விதவைகள், இளைஞர், யுவதிகள் அங்கவீனமடைந்தோர் போன்றோருக்கான திட்டங்கள் சரியான முறையில் நடைமுறைப் படுத்தப்படல் வேண்டும்.*

*(5) 1980 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையும் தமிழ், முஸ்லிம், சிங்கள, சமூகத்தவர்கள் தமது அசையும் அசையா சொத்துக்களை பரஸ்பரம் வாங்கியும் விற்றும் உள்ளனர். அப்படி விற்றவர்கள் அரசியல் அதிகாரத்தின் துணை கொண்டு தாம் விற்ற சொத்துக்களை மீண்டும் பெற முயற்சிப்பது பாரிய குளறுபடிகளை ஏற்படுத்தும். இது இனக்குரோதத்தை வளர்க்கும் செயல்பாடாகவும் உள்ளது. உதாரணமாக வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாவற்கொடிச்சேனை போன்ற கிராமங்களில் மேற்குறிப்பிட்ட பிரச்சனைகள் உருவெடுத்துள்ளன இப்படிப்பட்ட விடயங்களுக்கு ஒருசில தரப்பினர் அச்சுறுத்தல் விடுக்கின்றனரா? இது முளையிலே கிள்ளி எறியப்பட வேண்டும்.*

*(6) இம் மாவட்டத்திற்கு வளத்தை நல்கிய தொழில் பேட்டைகள், உற்பத்திச் சாதனங்கள் மற்றும் சொத்துக்கள், ஆகியவற்றின் விபரங்களை தங்கள் கவனத்திற்கு கொண்டுவருகின்றேன் .*

*(1) வாழைச்சேனை கடதாசி ஆலை*
*(2) அரசாங்க அச்சகம்*
*(3) அரிசி ஆலைகள்*
*(4) நெற்களஞ்சியங்கள்*
*(5) ஓட்டுத்தொழிற்சாலைகள்*
*(6) சீனிக்கூட்டுத்தாபனம், கரும்பு செய்கையும்*
*(7) அரச மரக்கூட்டுத்தாபனம்*
*(8) கரடியனாறு பண்ணை*
*(9) இயற்கை வளம் நிறைந்த வனங்கள்*
*(10) நீர்பாசனத்துக்குரிய சிறியகுளம்கள்*
*(11) பல்வேறு குடிசைக் கைதொழில்கள்*
*(12) ஐஸ் தொழிற்சாலைகள்*

போன்றவையும் இன்னும் பலவளங்களும் அழிவடைந்தும் சிதைவடைந்தும் போய் உள்ளன. இவைகள் யுத்தப் பாதிப்புக்கள் இல்லையா?

பல இடங்களில் இடம்பெயர்ந்து வாழ்ந்து வருபவர்கள் தொடர்பாக, இம் மாவட்டத்திலிருந்து இம் மாவட்டத்திற்குள் இடம் பெயர்ந்தவர்களினதும், இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு அகதியாக சென்று மீண்டும் இலங்கை வந்து மீளக்குடியமர்ந்தவர்களினதும், இம் மாவட்டத்திலிருந்து வன்னிக்குச் சென்று மீண்டும் இங்கு வந்து மீளக் குடியமர்ந்தவர்களினதும் தேவைகளின் விபரங்கள் பிரதேச செயலாளர் அலுவலகங்களில் பலகாலமாக தேங்கிக் கிடப்பதனை நாம் அனைவரும் நன்கு அறிவோம்.

கிழக்கு மாகாணசபையில் மீள்குடியேற்ற அமைச்சு ஒன்றை எவ்வித செயற்பாடுகளும் இல்லாமல் வெறும் பெயருக்கு மாத்திரம் வைத்திருப்பதன் காரணமென்ன என்று கேள்வி கேட்குமளவிற்கு தமிழ் சமூகம் இப்போது விழிப்படைந்துள்ளது என்பதை யாவரும் உணர்தல் வேண்டும்.

எனவே நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும் இனிமேலாவது முதலமைச்சர் மாகாண, மத்திய அமைச்சர்கள், மீள்குடியேற்ற அமைச்சர்கள் போன்றோர்கள் இவைகளை கவனத்திலெடுத்து மீள் குடியமர்ந்தோருக்கான தேவைகளை தீர்த்து வைக்க முன் வர வேண்டும்.



அமைச்சர் வி.முரளிதரன் (கருணா)

இவ்வாறு கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவருமான தோழர் துரைரட்ணம் அமைச்சர் வினாயகமூர்த்தி முரளிதரன் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இக்கடிதத்தின் பிரதிகள் கிழக்கு மாகாணசபை முதலமைச்சர் சி.சந்திரகாந்தன், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## தமிழ் தேசியக் கூட்ட ...

1 ம் பக்கத் தொடர்ச்சி

தவிர இந்த பேச்சுவார்த்தைகளில் அனுபவம் வாய்ந்த தலைவர்களையும் இணைத்துக் கொள்வதே தமிழ் தேசிய கூட்டமைப்பின பரந்த பன்முக ஜனநாயக இயல்பிற்கு எடுத்துக்காட்டாக அமையும் .

இதற்கிடையே பசில் ராஜபக்ச தலைமையில் மக்கள் சபைகள் அமைக்கப்படும் என தமிழ் ஆங்கில, சிங்கள ஊடகங்களில் செய்திகள் வந்திருக்கின்றன.

உள்ளூராட்சி, மாகாண சபைகளின் திட்டங்கள் நிர்மாணப்பணி நிதி போன்ற விடயங்களில் இந்த மக்கள் சபையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏப்பிரல் மாதம் இதற்கான திருத்தச் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது பற்றியும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகள் அரசதரப்பு பிரதிநிதிகளிடம் கேட்டறிந்து இது குறித்து மக்களுக்குத் தெளிவு படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

## உலக மானிடத்தின் கட ...

1 ம் பக்கத் தொடர்ச்சி

ஆனால், நாடுகள், எல்லைகள் என்ற அந்நியப்பட்ட சிந்தனை முறை நாம் மனித குலம் என்னும் எண்ணம் மானசீகமாக வருவதைத் தடுக்கிறது.

இந்த அனர்த்தத்தில் உலகின் 3வது பொருளாதார வல்லரசு என்று கூறப்படும் யப்பானே திணறுகிறது.

2004 சுனாமியின் பின்னராவது யப்பானிய அரசு சிந்தித்திருக்கவேண்டும். இந்த அணு உலைகள் அமைந்திருக்கும் இடம் பாதுகாப்பானதா என்று

ஏன் சில மாதங்களுக்கு முன்னர் நியுசிலாந்தில் ஏற்பட்ட பூகம்பத்தின் பின்னராவது சிந்தித்திருக்க வேண்டும்

உலகில் தற்போது நிலவும் உற்பத்தி உறவு முறை அத்தகைய சிந்தனைக்குத் தடை போடுகிறது.

இந்த உற்பத்தி உறவு முறை மாற வேண்டும். பங்கு மார்க்கட்டை வைத்து நாட்டின் வளர்ச்சியை அளக்கும் முறை மாறவேண்டும்.

உலகில் பொருளாதார ஆதிக்கத்தை செலுத்துவதற்காக புவியின் வெப்பநிலை அதிகரித்துச் செல்வதைப்பற்றி உலகின் பொருளாதார வல்லமைகள் என்று சொல்லப்படும் நாடுகள் அவ்வளவு கவலைப்படுவதாய் இல்லை என்பதும் அவர் களே அதற்கு காரணமாய் இருக்கிறார்கள் என்பதும் வேதனையான உண்மையாகும்

இன்று புவிக்கோளின் இயற்கைக்கு விரோதமான காரியங்களை சவால்களை எதிர்கொண்டு இயற்கையுடன் இணங்கி வாழும் போக்கையே முன்னெடுக்க வேண்டும்.

ஈவிரக்கமற்ற வளங்களை சூறையாடும் ஏகாதிபத்திய ொருளாதார உறவுமுறைக்கு மாறாக எல்லோரும் இன்புற்றிருக்கவே இவ்வுலகு எனச் சிந்திக்க வேண்டும்.

இந்த முதலாளித்துவ உற்பத்தி முறை காலாவதியானது என்பதையே இயற்கை மற்றும் அனர்த்தங்களும் சரி சமகால மக்கள் கிளர்ச்சிகளும் சரி உணர்த்தி நிற்கின்றன.

பல்லாயிரக்கணக்கான உறவுகளின் இழப்புக்களுக்கு மத்தியில் குளிரிலும் இருளிலும் அணுக்கதிரவீச்சு அபாயங்கள் மத்தியில் வாழும் யப்பானிய மக்களுக்கு நம்பிக்கையூட்டுபவர்களாக துரிதமாகச் செயற்படுவது உலக மானிடத்தின் கடமை.

www.padippakam.com



# மட்டக்களப்பு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

### பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவரும் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான இரா.துரைரத்தினம் கிழக்கு முதலமைச்சர் மற்றும் ஆளுனரிடம் புகார்

குறிப்பிட்ட காலமாக இம்மாவட்ட மக்கள் மத்தியில் முரண்பாடுகளை ஏற்படுத்தக் கூடிய பல விடயங்கள் தீர்க்கப்படாமல் இழுத்தடிக் கப்பட்டுக்கொண்டே போகின்றன. இவ்விடயங் களை விரைவாக தீர்க்காவிடில் அவைகள் எதிர்காலத்தில் வேறு வேண்டத்தகாத வடிவங் களை எடுக்கும். எனவே விரைவாக ஆளும் தரப்பினர் இவை பற்றி கவனம் செலுத்துதல் வேண்டும் .

நல்லாட்சி, வெளிப்படைத்தன்மை, வன்முறை யற்ற தன்மை, ஊழல் அற்ற நிர்வாகம் என்பன



**கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன்**

வற்றையே எமது சமுகம் விரும்புகின்றது. ஆனால், இங்குள்ள சில ஆளும் அரசியல் வாதிகளின் இயல்பு இவைகளுக்கு நேர் விரோதமாக இருக்கின்றது .

இருக்கின்ற குறிப்பிட்டளவு நிதியை மறைவாக தங்களுக்கு பொருளாதார ரீதியாவும் அரசியல் ரீதியாகவும் இலாபம் தருகின்ற விடயங்களுக்கு தன்னிச்சையாக ஒதுக்குகின்றனர்.

பொது அமைப்புக்களும், மக்களும், ஏனைய அரசியல் பிரதிநிதிகளும் சமுகநலன் சார்ந்த திட்டங்களை முன்வைக்கும் போது நிதிப் பற்றாக்குறை எனவும் அரசாங்கம் போதிய நிதி எமக்கு ஒதுக்கவில்லை எனவும் பொறுப்பற்ற விதமாக கூறுகின்றனர்.

இந்த நிலை மாறினால் மாத்திரமே எம் சமுகத் திற்கு விடிவு கிட்டும். எனவே கடந்த காலத் தில் நடந்தவைகளை போல் இனியும் தொடரா மல் ஆளும் அரசியல்வாதிகள் யதார்த்த நில மையை புரிந்து கொண்டு செயல்படுவதோடு கீழ் உள்ள விடயங்களை தீர்த்துவைப்பதற்கும் முன்வருதல் வேண்டும்.

1 கால்நடைகளுக்கென ஒதுக்கப்பட்ட மேய்ச் சல் தரையில் அத்துமீறி எல்லைகள் (வேலிகள்) அமைக்கப்படுகின்றன.

குறிப்பாக செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவில் (பதுளை வீதி) பெரியபுல்லுமலை மேற்கு பகுதியான மகாஓயா சந்தி வீதி தொடக்கம் அரந்தலாவ ஊடாக மகிழ வெட்டுவான் ஆறு வரையும் அதாவது பெரியஆறு வரையும்,

வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவில் வெட்டிப்போட்டசேனை, மங்களகம ஊடாக கதிரக்கல் மலை, புளுக்குனாவக் குளம் மேற்பகுதியால் வந்து பட்டிப்பளை பிரதேசப் பிரிவான கெவுழியாமடு அதாவது கச்சைகொடி வீதிவரையும் அண்ணளவாக 18 கிலோ மீற்றர் வேலிகள் அமைக்கப் பட்டுள்ளன. இப்பகுதிகளில் பல இடங் களில் அத்துமீறி விவசாயச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது இவை அனைத் தும் தடுக்கப்பட வேண்டும்

2 கால்நடைகளுக்கு ஒதுக்கப்பட்ட மேய்சல் தரைகளை அபிவிருத்தி செய்தல். மாவட்டத் தில் வாகரை, கிரான், செங்கலடி, வவுண தீவு, பட்டிப்பளை வெல்லாவெளி பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கிய பகுதி களில் அண்ணளவாக 70 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஏக்கர் காணிகள் மேய்ச்சல் தரைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இக் காணிகளை அத்துமீறிப் பிடிப்பதை தடுத்து நிறுத்தல் வேண்டும். இத்தோடு பின்வரும் நட வடிக்கைகளை மேற்கொண்டு கால்நடை வளர்ப்போருக்கு உதவுதல் வேண்டும்.

- மேய்சல் தரையில் அத்துமீறி விவசா யம் செய்வதை தடுத்தல்
- கால்நடைகளுக்கான குடிநீர் வசதியை ஏற்படுத்தல்
- மேய்ச்சல் தரைக்கு எல்லைக் கற்களை நடுதல்
- எதிர்காலத்தில் மேய்ச்சல் தரையை தனித்தனியாக பங்கிட்டு கால்நடை வளர்ப்போருக்கு வழங்க திட்டமிடல்.

3 வெள்ளத்தால் அழிந்த கால்நடைகளுக்கு பதிலாக புதிய கால்நடைகளை வழங்குவ தோடு சட்டரீதியற்ற முறையில் அவைகள் கடத்திச் செல்லப்படுவதையும் தடுத்தல்.

4 விமானநிலைய காணியில் உள்ள பிரச்சி னைகளை தீர்த்தல்.

- விமானநிலைய எல்லையில் உள்ள வெற்றுக்காணியை புதூர் பாடசாலை க்குரிய விளையாட்டு மைதானமாக மாற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டும் இவ் எல்லைப் பகுதியில் இந்துக் கோயிலும் உண்டு.

**இருக்கின்ற குறிப்பிட்டளவு நிதியை மறைவாக தங்களுக்கு பொருளாதார ரீதியாவும் அரசியல் ரீதியாகவும் இலாபம் தருகின்ற விடயங்களுக்கு தன்னிச்சையாக ஒதுக்குகின்றனர். பொது அமைப்புக்களும், மக்களும், ஏனைய அரசியல் பிரதிநிதிகளும் சமுகநலன் சார்ந்த திட்டங்களை முன்வைக்கும் போது நிதிப் பற்றாக்குறை எனவும் அரசாங்கம் போதிய நிதி எமக்கு ஒதுக்கவில்லை எனவும் பொறுப்பற்ற விதமாக கூறுகின்றனர்.**

- இப்பகுதியில் ஒரு பொதுமைதானமும் இல்லை. இம்மைதான விடயம் தொடர் பாக வருடாவருடம் நிபந்தனையின் அடிப்படையில் விளையாட்டுப் போட்டி நடாத்துவதற்கு விமானநிலையத்தின் மேற்பார்வையில் உள்ள காணியை தற்காலிகமாக அனுமதிப்பது வழக்கம்.

5 விமான நிலையப் பகுதியில் உள்ள கிறி ஸ்தவ, இந்து பொதுமயானத்தை மாநகர சபைக்கு ஒப்படைத்து, பூதவுடல்களை எரிப்பதற்கும் நினைவுக்கல் நடுவதற்கும், சுதந்திரமான நடமாட்டத்திற்கும், அனுமதி அளிக்கவேண்டும்.

6 பட்டிப்பளை பிரதேசசெயலாளர் பிரிவில் உள்ள கச்சைக்கொடி, சுவாமிமலை பகுதி யில் உள்ள கெவுழியாமடு கிராமத்தில் தமிழர்களுக்கு சொந்தமான விவசாய நில ங்களான தேத்தாத்தீவுக்கண்டம் பகுதியிலும் ஏனைய பகுதியிலும் 40 பேருக்கு மேற்பட்ட விவசாயிகளின் காணிகள் பெரும்பான்மை சமூகத்தினரால் பலத்காரமான முறையில் விவசாயச் செய்கை பண்ணப்படுகின்றது. இக்காணிகள் உரியவர்களிடம் பெற்றுக் கொடுக்கப்படல் வேண்டும்.

7 விவசாயம் செய்வோரில் பெரியமுதலீடு செய்து விவசாயம் செய்வோரும், சுய தேவைக்காக விவசாயம் செய்வோரும் என இருவகையினர் உண்டு இவர்கள் யாவரும் பாதிக்கப்பட்டுள்ளனர் இவர்களுக்கான நஸ்டஈடு வழங்கப்பட வேண்டும்.

8 குடிதண்ணீர் வழங்குவது தொடர்பாக வவு ணதீவு பிரதேசசெயலாளர் பிரிவில் பல கிராம சேவையாளர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டு நிதி ஒதுக்குவதாக வாக்களி த்தும் இன்னும் நிதி ஒதுக்கப்படவில்லை விரைவாக இதற்கான நிதி ஒதுக்கப்பட வேண்டும்.

9 மக்களின் அவசியத் தேவைகளுக்கு நிதி போதாது எனக் கூறிக்கொண்டு அரசாலும்- நிறுவனங்களாலும் சில அபிவிருத்திக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி வீண் விரயம் செய் யப்படுகின்றது. இவை தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

10 மாவட்டத்தில் தொழிலற்று இருப்பவர்களு க்கு இங்குள்ள அரச விவசாயக் காணி களை இரண்டு அல்லது மூன்று ஏக்கர் வீதம் பகிந்தளித்து விவசாயத்தை ஊக் குவிப்பதோடு வேலை இல்லாத் திண்டாட் டத்தையும் குறைக்கலாம்.

11 ஒவ்வொரு கூட்டுறவு சங்கமும் அந்தந்த பகுதி விவசாயிகளிடம் இருந்து நெல்லை வாங்கி அரிசி ஆக்கி அப்பகுதி மக்களு க்கு விற்பதற்கு சிறிய அரிசி ஆலைகளை அமைக்க ஆவனசெய்தல் வேண்டும்.

12 மாவட்டத்திலுள்ள வவுணதீவு, மண்முனை வடக்கு, ஆரையம்பதி, செங்கலடி, கிரான், பட்டிப்பளைப் பிரதேச செயலகப் பிரிவு களில் காணிப்பிரச்சினையைத் தீர்த்தல்.

13 மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் எதிர்நோக்கும் கழிவகற்றல் பிரச்சினைக்கு தீர்வுகாணல்.

14 வாய்க்கால், குளம், சிறிய பாலம், மதகு, விவசாயப்பாதை போன்றவற்றை அபிவிரு த்தி செய்து விவசாயக்கண்டங்களில் 3 போகம் செய்யும் வாய்பை ஏற்படுத்துதல்

15 சீரற்றமுறையில் நீர்வடிந்தோடுவதை உட னடியாக மாற்றி நிரந்தரதிட்டம் தயாரித்து முறையான வடிகால் அமைப்பை சகல பிரதேசத்திற்கும் ஏற்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

# பிரான்ஸ் இலக்கியச் சந்திப்பு தேடல்களுக்கான ஒரு களம்



பிரான்சின் தலைநகர் பாரிசில் 38 வது இலக் கியச் சந்திப்பு பெப்ரவரி 19, 20ம் திகதிகளில் நடைபெற்றது. 70 இற்கு மேற்பட்டோர் பங்கு கொணடனர்.

இந் நிகழ்வில் தீண்டாமைக் கொடுமைகள், பெண் ஒடுக்குமுறை இனரீதியான முரண் பாடுகள், உறவுகள், ,தன்னினச் சேர்க்கையாளர் கள், திருநங்கையர் எதிர் நோக்கும் சவால்கள் சூழலியல் சிதை வுகள் வட ஆபிரிக்க அரபுக் கிளர்ச்சிகள் குறித்துப் பேசப்பட்டன.

கட்டுரை, புத்தகம், கவிதை, ஆற்றுகை, ஓவியம் என பலவடிவங்களில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

எதற்கும் சர்வரோக நிவாரணிகள் இருப்பதாகப் பேசப்படவில்லை.

உணர்வுகளில் தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் நிகழ்ச்சியாக இருந்தது. வரண்ட, விரக்தியான, வன்முறை சூழ் வெளியில் செயற்படும் எனக்கு சற்று மன ஆறுதல். நாம் தனிமையில் இல்லை என்ற உணர்வு.

ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் இலங் கையிலும் இந்தியாவிலும் வாழும் சமூகப் பிரக்ஞை உள்ளவர்களின் சங்கமம் அது.

அவரவர் கண்ணோட்டத்திலிருந்து வெளிப் படுத்தப்பட்டது.

வன்முறையற்ற சமூகம் வலியுறுத்தப்பட்டது. வன்முறைமயப்பட்ட கடந்த காலமும் நிகழ் காலமும் அகல வேண்டும் என்ற அங்கலாய்ப்பு காணப்பட்டது.

சகலவிதமான எமது சமூக பத்தாம்பசலித் தனங்களுக்கெதிராக கேள்வி எழுப்பப்பட்டது.

சகல சமூகத் தழைகளிலிருந்தும் விடுபடவேண்டும் என்ற மானசீகமான உணர்வு வெளிப்படுத்தப்பட்டது.

ஆக்கபூர்வமாக பேசியவற்றை செயற்படுத்துவதற்கான பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**- சுகு -**

சகலவிதமான எமது சமூக பத்தாம்பசலித் தனங்களுக்கெதிராக கேள்வி எழுப்பப்பட்டது. வெவ்வேறுபட்ட கருத்துக்களினூடாக மனிதாபி மானம் அங்கு பிரவாகித்தது.

சகலவிதமான சமூகத் தழைகளிலிருந்தும் விடுபடவேண்டும், இங்கு புனித ஏற்பாடென்று எதுவுமில்லை என்ற மானசீகமான உணர்வு யுத்தம், வன்முறை, இயற்கை அனர்த்தங்களால் அனுபவித்த துன்பங்கள் பலராலும் எடுத்துரைக் கப்பட்டது.

சமூகங்களிடையே புரிதலை ஏற்படுத்துதல், கலை, இலக்கியம் சினிமாவினூடான முயற்சிகள் அனுபவங்கள் கருத்துக்கள் பரி மாறப்பட்டன.

சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவத்தை வலியுறுத்திய கிளர்ச்சிகள் நடைபெற்ற நாட்டின் தலைநகரில் இந்நிகழ்வு நடைபெற்றது சிறப்பு.

மெலிதான சூடான விவாதங்களின் இடையே சகோதரத்துவம் நிலவியது.

நாட்டு நிலைமை புலம்பெயர் தளத்தின் கல வைச் சாயல் அனுபவங்களுடன் பரிமாறப் பட்டன. ஐரோப்பா, வட அமெரிக்கா, இலங்கை, இந்தியாவிலிருந்து இந்த சங்கமம் நிகழ்ந்தது.

சமூகத்தின் தார்மீக உணர்வை வலுப்படுத்து பவை இத்கைய நிகழ்ச்சிகளே.

“எட்டுத்திக்கும் செல்வோம் கலைச் செல்வங் கள் யாவும் கொணாந்திங்கு சேர்ப்போம்” என்ற பாரதியின் வார்த்தைகள் இங்கு யதார்த்தமாக வேண்டும். எமது உலகளாவிய பலத்தினை சாதகமாக பிரயோகித்தால் அது சமூகத்தின் விமோச னத்திற்கு பாரிய பங்களிப்பாகும். இந்தச் சந்திப்புக்கள் இன்னும் ஆழமும், முதிர்ச்சியும், ஈடுபாடும் நிறைந்ததாக ஆக வேண்டும்.

ஆக்கபூர்வமாக பேசியவற்றை செயற்படுத்து வதற்கான பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

போருக்குப் பிந்திய புலம்பெயர்தள இடை வெளியில் இன்னும் விரிவாகச் செயற்பட முடியுமா என்று பார்க்கவேண்டும்.

www.padippakam.com



களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

யுத்தம் முடிந்த பின்னரும் இராணுவ மயப்பட்ட சூழ்நிலை என்பது அசௌகரியமாக இருக்கிறது. இந்த சூழ்நிலை அகல வேண்டும்.

மேலும் உயர் பாதுகாப்பு வலயங்கள் படிப்படியாக அகற்றப்பட்டு மக்கள் படிப்படியாக குடியேற அனுமதிக்கப் பட்டாலும் அடிப்படை உள்ளக கட்டமைப்பு வசதிகள் உடனடியாக ஏற்படுத்தப்படவேண்டும்.

இருப்பதற்கு வீடு, உணவு, பிள்ளைகளுக்கு கல்வி, சுகாதாரம், தொழில் வாய்ப்பு, பாதுகாப்பான சுதந்திரமான வாழ்வு என்பனவே தற்போது முன்னுரிமை பெறுபவை.

களவு, கொள்ளை, கொலை, ஆட்கடத்தல் என்பன குறிப்பாக மக்களை பீதி ஊட்டும் அளவிற்கு அதிகரித்துள்ளன. யுத்தகாலத்தில் போன்றில்லாவிட்டாலும் இவை அன்றாட செய்திகளாக இருக்கின்றன.

சமூகத்தின் உள்ளிருந்தும் வெளியிருந்தும் இயக்கப்படும் வன்முறைகள் அறவே ஒழியவேண்டும்.

இதற்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவேண்டும்.



# யுத்தத்திற்குப் பிந்திய சமுதாயம்

**யுத்தத்தில் பாரிய அளவில் பாதிக்கப்பட்ட தமிழ் முஸ்லீம் மக்கள் விரக்தியின் விழிம்பிலேயே வாழந்து கொண்டிருக்கிறார்கள். அரசியல் உரிமைகள் அங்கீகரிக்கப்படாமல் அது தொடர்கதையாக இழுபட்டுச் செல்வது ஒருபுறமிருக்க யுத்தத்தில் உறவுகளை உடைமைகளை இழந்த வடக்கு- கிழக்கு மக்களின் அன்றாட வாழ்வில் நம்பிக்கை ஒளி ஏற்றப்படவில்லை.**

ஆண் தலைமையில்லாத பெண்கள் மாத்திரம் தலைமை தாங்கும் குடும்பங்கள் தாங்கமுடியாத துன்பத்தை அனுபவிக்கின்றன.

தொழில் இன்மை, வறுமை, பிள்ளைகளின் கல்வி- எதிர்கால கவலைகள் என அவர்கள் அன்றாடம் துன்ப துயரங் மண்டிக்கிடக்கிறது. அடுத்தடுத்து வந்த பெருமழை இய ற்கை அனர்த்தங்களில் விவசாயமும் பொய்த்துப்போய்விட்டது.

அரச உதவிகளுக்கு அப்பால் அரச சார்பற்ற நிறுவனங்களையும் செயற்பட அனுமதிக்க வேண்டும். அது நிச்சயம் மக்களுக்குப் பலனளிக்கும்.

**யு**த்தத்திற்கு பின்னர் பல்வேறு நாடுகளில் ஜனநாயகமும் அபிவிருத்தியும் என்பதே வழமையாக இருக்கிறது.

ஒரு சில விதிவிலக்குகளைத் தவிர அனுபவங்களை பாடங்களாக எடுத்துக் கொண்டு சமூக முன்னேற்றத்தை நோக்கி நடைபோட்டிருக்கின்றன.

பல ஐரோப்பிய நாடுகள், இந்தியா, வியட்னாம், தென்னாபிரிக்கா, பல லத்தீன் அமெரிக்க நாடுகளில் இவற்றை நாம் வெவ்வேறு காலங்களில் அவதானித்திருக்கிறோம்.

எமது நாடும் யுத்தம் முடிவடைந்த சந்தர்ப்பமொன்றைப் பெற்றிருந்தாலும் யுத்தத்தில் பாரியஅளவில் பாதிக்கப் பட்ட தமிழ் முஸ்லீம் மக்கள் விரக்தியின் விளிம்பிலேயே வாழந்து கொண்டிருக்கிறார்கள்.

அரசியல் உரிமைகள் அங்கீகரிக்கப் படாமல் அது தொடர்கதையாக இழுபட்டுச் செல்வது ஒருபுறமிருக்க யுத்தத்தில் உறவுகளை உடைமைகளை இழந்த வடக்கு- கிழக்கு மக்களின் அன்றாட வாழ்வில் நம்பிக்கை ஒளி ஏற்றப் படவில்லை. 12 தகரங்கள் 3 சிமெந்துப் பைகள் 5000 சக 20000 பணம் என்பதற்கு மேல் முன்னேற்றம் இல்லை.

அவர்கள் சொந்த இடங்களுக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் வாழ்க்கை இருள்

---

அடிப்படையில் பார்ப்போமானால், இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர், ஏறத்தாழ அனைத்துத் தேர்தல்களிலும், ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் தான் - ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சி, பின்னர் ரி.யு.எல்.எவ்., அதன் பின்னர் ரி.என்.ஏ. - தமிழர்களால் பெரும்பான்மைப் பிரதிநிதித்துவம் கொண்டவர்களாகத் தெரிவு செய்யப்பட்டு வந்துள்ளார்கள். ஆனால், இவர்களில் அநேகர் தங்களின் தனிப்பட்ட அரசியல், சமூக, பொருளாதார அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொண்டார்களேயன்றி, தமிழர்களின் அரசியல், சமூக, பொருளாதார அபிலாஷைகளைச் சிறிதளவேனும் அவர்களால் பெற்றுத் தர முடிந்ததா?

எனவே, 'ஒற்றுமை' கோஷம் தேர்தல்களில் தம் வெற்றிகளை உறுதிசெய்து கொள்ளவும், 'ஒற்றுமையின்மை' என்ற காரணம் மக்களுக்கு எதுவுமே பெற்றுத்தராத தமது கையாலாகத்தனங்களையும், பலவீனங்களையும், அரசியல் வங்குரோத்தையும் மறைக்கவும், மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றுவதற்கு அவ்வப்போது பிரயோகிக்கப்படும் போர்வைகளே!

தமிழர்களின் இன்றைய இழி நிலைக்கான காரணங்கள், அரசியல் அணுகுமுறைப் பிசகுகள், தூரநோக்கற்ற செயற்பாடுகள், (கொஞ்சம் பின்நோக்கிப் பாருங்கள்: நாம் தவறவிட்ட சந்தரப்பங்கள் கொஞ்ச நஞ்சமா?) தேர்தல்களில் வெற்றியீட்டுவதற்காக சுயநலமே ஒரே நோக்காக பொய்மையைப் பெருக்குவது, துவேஷத்தை வளர்ப்பது, வாயில் மக்கள் நலனும் நெஞ்சில் சுய நலனுமாக அரசியல் நடாத்துவது ஆகியவையே!

*கி.முரளிதரன் சுவிற்சர்லாந்து*

***ரியூனிசியாவில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம், பின்னர் எகிப்தில் நடைபெற்று, இப்பொழுது யெமன், லிபியா ஆகிய மத்திய கிழக்கு நாடுகளிலும் தாக்கங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறதே?***

அடக்கு முறைகளை, சர்வாதிகாரத்தை, பதவிகளைத் தமக்கும் தம்மைச் சார்ந்தோருக்கும் மட்டுமே இரும்புப் பிடியில் தக்க வைத்துக் கொள்ளும் ஏதேச்சிகாரம், ஏழைகளின் வயிற்றிலும், வாழ்விலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும் பிரமாண்ட ஊழல்களை, பொருளாதாரச் சுரண்டல்களை, அந்த நாட்டில் வாழும் பாதிப்புக்குள்ளான அடித்தள மக்கள் கிளர்ந்தெழுந்தால் முறியடிக்க முடியும் என்ற உண்மை நிரூபணமாவதை எம்மால் இவற்றில் பார்க்க முடிகிறது! நீறுபூத்த நெருப்பாக இருக்கும் மக்கள் சக்தி அதற்கான ஒரு காத்திரமான உந்துதல் ஏற்படும் போது ஜுவாலையாகக் கிளர்ந்தெழுகிறது் பற்றி எரிந்து பரவுகிறது!

இந்த நாடுகளின் பாதுகாப்புப் படையின் தலைமை, மக்களின் கிளர்ச்சியை அதீதமான ஆயுதப் பிரயோகத்தால் அடக்க முற்படாது இருந்தமை பொதுமக்களின் அதிக உயிர் இழைப்பைத் தவிர்த்து இருக்கிறது.

ஆனாலும், இந் நாடுகளில் ஏற்பட்டிருக்கும் அரசியல் அதிகார வெற்றிடத்தை நிரப்ப, அந்த நாடுகளின் இராணுவம், 'தற்காலிகம்' என்ற பெயரில் உண்மையான மக்கள் ஆட்சி மலர்வதை மறுதலிப்பது, முஸ்லிம் தீவிரவாதிகள் முண்டியடிப்பது, வெவ்வேறு விசுவாசங்களால் மக்களுக்கிடையே மோதல்கள் முளைப்பது, இந்த நாடுகளின் அதிகார வர்க்கம் தங்கள் பிடி தளராது பாதுகாக்க முனைவது, இந்நாடுகளிலிருந்து பலர் மேற்கு நாடுகளில் தஞ்சம் கோருவது, வல்லரசுகள் தலையிடுவது இவற்றால் இரத்தக்களரிகள் ஆகியவை நிகழும் சாத்தியக்கூறுகளை எப்படி இம் மக்களும் அவர்களின் தலைவர்களும் கையாளப் போகிறார்கள் என்பதில் தான் இந்த மக்களின் உண்மையான சுபீட்சம் தங்கியிருக்கிறது!

படுகொலை செய்த புலிகளுடன் உறவு கொண்டு, அவர்களுக்கு வக்காலத்து வாங்கி பதவி சுகங்களை அனுபவித்தவர்கள்? தம்முடன் தோளோடு தோள் சேர்ந்து கட்சியை வளர்த்தவர்களுக்கு, தம்மைத் தலைவனாகக் கருதிய கட்சியின் தொண்டர்களுக்கு, தம்மை நம்பிய கட்சியின் செயற்பாட்டாளர்களுக்கு, கணக்கு வழக்குக் காட்டாதிருக்க கட்சியையே உடைத்தவர்கள்? இலங்கை அரசை "எங்களையும் சேர்த்து ஏதாவது செய்யுங்கள்" எனக் கெஞ்சியும், வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு சிங்களத் தலைமை மீதும், சிங்கள மக்கள் மீதும் துவேஷத்தைக் கக்கியும், புலம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு தங்களது அசிங்கங்களை மறைத்து "ஒற்றுமை" என்ற பதத்தைக் காட்டியும், தமிழ்மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றி அவர்களின் துன்பத்தில் அரசியல் நடாத்தும் பலமுகங்கள் கொண்டவர்கள்! இவர்கள் தான் பெரும்பான்மை பிரதிநிதித்துவத்தை கொண்ட தமிழ் கட்சி முக்கியஸ்தர்கள் என்று இருக்கும்போது, இவர்கள்தான் வேட்பாளர்களைத் தெரிவு செய்பவர்கள் என்ற நிலைமை இருக்கும்போது, இவர்களின் சில்லறைத் தனமான வியூகங்களை உள்ளடக்கிய தேர்தல்கள்தான் மக்கள் முன் இருக்கும் தேர்வுகள் என்றிருக்கும்போது, அத் தேர்தல்களினால் வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்கள் வளம் பெறுவார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?



*இ.பாஸ்கரன் சுழிபுரம்*

***இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் இன்றைய இழி நிலைக்குக் காரணம் அவர்களுக்கிடையே "ஒற்றுமை இன்மை" என்று பலர் கூறுவது பற்றி உங்கள் கருத்து என்ன என்று கூறுவீர்களா?***



தமிழர்களுக்கு அரசியல், பொருளாதார பின்னடைவுகள் ஏற்படும் போதெல்லாம் அதற்கான காரணம் 'ஒற்றுமை இன்மை' என்று அடிக்கடி - கடந்த பல தசாப்தங்களாக-கூறப்பட்டு வருவது சரியானதென நான் கருதவில்லை.

'ஒற்றுமை' என்று இவர்கள் கூறுவதன் வியாக்கியானம், தமிழரைப் பிரதிநிதிப்படுத்தும் அனைவருமே நூறு சதவிகிதமாக ஒரு கட்சியின் கீழ் தேர்தல்களில் தெரிவு செய்யப்பட்டு தமிழர்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியும் என்றால், ஒரு ஜனநாயகச் சூழலில் அது யதார்த்தமான எதிர்பார்ப்பாக இருக்க முடியாது? இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தின் போதும் மாற்று அரசியல் கட்சிகளும், கொள்கைகளும் இருந்தன. எனவே, மாற்றுக் கருத்துக்களும் கட்சிகளும் இருப்பது தவிர்க்க முடியாது. ஆகவே, ஒற்றுமை எனப்படும் போது, ஒரே கட்சியினரின் பெரும்பான்மைப் பிரதிநிதித்துவம் என்ற அளவுகோலின்

*ம.கஜன் பருத்தித்துறை*

***"தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரின் கண்மூடித்தனமான தாக்குதல்களுக்குப் பலியாகிறார்கள்" என்று சில தமிழக அரசியல்வாதிகள் வெளியிடும் அறிக்கைகள், நடாத்தும் ஆர்ப்பாட்டங்கள் ஆகியவை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?***

தம் வாழ்வின் அடிப்படைத் தேவைகளுக்காக பல சிரமங்களுக்கு மத்தியில் உழைக்கும் இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்சினை சுமுகமாக தீர்த்துவைக்கப்பட வேண்டும். இலங்கை கடற்பரப்பில் காணப்படும் கடல் வளங்கள் நாசமாக்கப்படுவதோ, இலங்கை மீனவர்களின் ஜீவனோபாயத்தின் அடிப்படை மூலதனமான வலைகள் சேதமாக்கப்படுவதோ எவ்வாறு எற்றுக்கொள்ளப்பட முடியாதோ அவ்வாறே இந்திய மீனவர்களை பயங்கரக் குற்றவாளிகள் போல் சுற்றிவளைத்து கைது செய்வதோ அவர்களைத் தாக்குவதோ அல்லது அவர்களின் உபகரணங்களைப் பறிமுதல் செய்வதோ, சேதப்படுத்துவதோ எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத செயற்பாடுகளாகும். மேலும் இந்த நடவடிக்கைகளில் இலங்கை மீனவர்களே ஈடுபடுவது மோசமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

இலங்கை அரசாங்கமும், இந்திய அரசாங்கமும் தமிழக மீனவர்கள் சிலரின் கடல் எல்லை மீறல்களை மீனவத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னையாக கருதி தங்களின் கடற்படைகள் மூலமாக அவர்களை எச்சரித்து, விதிக்கப்பட்ட எல்லைகளுக்குள் தமது தொழிலை மேற்கொள்ளுமாறு செய்வித்தலே இந்தப் பிரச்னைக்குத் தீர்வாகும்.

ஆனால், அநியாயமாக, சில அரசியல்வாதிகளால் தமது கீழ்த்தர அரசியல் ஆதாயத்திற்காக மீனவர்கள் பலிக்கடாக்களாக்கப் படுகிறார்கள். அவர்களின் விருப்பம் அந்த அடிமட்டத் தொழிலாளிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு அவர்கள் தங்கள் தொழிலை மேற்கொண்டு செழுமையாக வாழ வேண்டும் என்பதல்ல? மாறாக, வெறுப்பையும் குரோதத்தையும் கோபத்தையும் வளர்ப்பதே அவர்களின் பிரதான நோக்கம். இதற்கு இந்திய இலங்கை மீனவர்கள் பலிக்கடாக்களாகி விடக்கூடாது.

*ச.வசந்தி யாழ்ப்பாணம்*

***உள்ளூராட்சித் தேர்தல் வெற்றிகளால் துவண்டு போயிருக்கும் வடக்கு கிழக்கு வாழ் தமிழர்களின் வாழ்வு வளம் பெறுமா?***

இந்தத் தேர்தல்களில் யார், எந்தக் கட்சிகள் பங்குபற்ற வேண்டும் என்பவற்றின் முடிவுகளுக்குக் காரணமாக இருந்த தமிழர்களின் பெரும்பான்மை பிரதிநிதித்துவம் பெற்ற கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலரின் கடந்த சமீபத்திய சரித்திரத்தையும், அவர்களின் யோக்கியதையையும் நீங்களே சிறிது சிந்தித்துப் பார்த்தால் பதில் உங்களுக்குப் புரியும்? இவர்கள், புலிகளின் தலைமைத்துவத்தின் நடவடிக்கைகள் தமிழ் மக்களை அதல பாதாளத்திற்கே இட்டுச் செல்கிறது எனத் தெளிவாகத் தெரிந்தும், புலிகளுக்கு அஞ்சியும், முதுமையின் எல்லையில் நிற்கும் கட்சித் தலைவர்களது இறப்பினால் ஏற்படப் போகும் தலைமை வெற்றிடத்தை தமதாக்கிக் கொள்ளலாம் என்று கணக்குப் போட்டும் நாளாந்தம் பலியாகிக் கொண்டிருந்த தமிழ் மக்கள் விடயத்தில் நீலிக் கண்ணீர் வடித்துக் கொண்டு அரசியல் நடாத்திய கல்நெஞ்சக்காரர்கள்! தமிழர்களின் இன்றைய நிலைமைக்குத் தாங்களும் ஒரு காரணமாக இருந்தும் அதற்காகத் தமிழர்களிடம் எவ்விதத்திலும் மன்னிப்புக் கோராத மனச்சாட்சி அற்றவர்கள்! ஈழத் தமிழர்களின் விடிவிற்காக உழைக்க முன்வந்த, தமக்கு வழிகாட்டிய தமது தலைவர்களை கொடூரமாக, கோழைத்தனமாக

www.padippakam.com



# சர்வதேச பெண்கள் தினம்

## சவால்களை எதிர்கொண்டு முன்செல்ல ...

சுகு

சர்வதேச பெண்கள் தினம் உலகளாவிய அளவில் நினைவு கூரப்படும் நிலையில் இலங்கையில் பெண்கள் நிலையையும், பால் சமத்துவமின்மையையும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இலங்கை யுத்தத்தில் மரணமடைந்தவர்கள் போக வடக்கு கிழக்கில் பெரும்பான்மையான குடும்பங்கள் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களாகவே இருக்கின்றன.

இவர்கள் பல்வேறு சவால்களை எதிர் நோக்குகிறார்கள் .பாலியல் தக்குதல்கள் வீட்டிலும் வெளியிலும் இவற்றையும் தாண்டி வீட்டின் பொருளாதாரம், பிள்ளைகளின் கல்வி இன்னோரன்ன தேவைகளுக்காககவும் அலைய வேண்டியிருக்கிறது

சிறையிலுள்ள பிள்ளைகளின் விடுலைக்காக சிறப்பு முகாம் களுக்கும் சிறைகளுக்கும் இவர்களே பெரும்பாலும் செல்ல வேண்டியிருக்கிறது.

வீட்டைப்புனரமைப்பது, நிவாரணம் மற்றும் கடன்களுக்காக இவர் களே அலைகிறார்கள். குடும்பத்திற்கு வருமானத்தைப் பெறுவதற் காக அன்றாட உழைப்பிலும் இவர்களே ஈடுபடுகின்றார்கள்.

கடந்த 30 வருட வன்முறை மயப்பட்ட சூழல், அதற்குப் பிந் திய சூழலில் கூடுதலாகப் பாதிக்கபட்டவர்கள் பெண்களே.

வீடுகள் தனிமைத்துவங்கள் இழக்கப்பட்டதால் அசௌகரியங் களை எதிர்நோக்குபவர்கள் பெண்களே.

தனிமை, சமூகப்பாதுகாப்பின்மை என்பன எமது சமூகத்தில் மிக மோசமான பிரச்சனைகளாகும்.

மத்திய கிழக்கிலும், மேற்காசியாவிலும் வேலைக்குச் சென்ற பெண்கள் அனுபவிக்கும் துன்பங்கள் நாளாந்தச் செய்திகள்.

சவுதி அரேபியாவில் மரணதண்டனையை எதிர்நோக்கி நிற்கும் மூதூர் சபீனா நாபிக் சிறுமியாக கைதுசெய்யப்பட்டு செய்யாத குற்றத்திற்கு மரணதண்டனை விதிக்கப்பட்டு பல வருடங்களாக சிறை வாசம் அனுபவித்து வருகிறார். சவுதி அரேபியாவின் மானிட தர்மங்களற்ற அந்தக நீதித்துறையோ, அரசோ உலக மனிதாபிமானக் குரலுக்கோ அல்லது பகுத்தறிவு, உண்மைக்கோ செவிசாய்ப்பதாக இல்லை. மாத்தறையைச் சேர்ந்த இன்னொரு பெண்ணுக்கோ சிலுவை சுமந்த யேசுவிற்கு நடந்த கொடுமை களை விட அதிகமாக கொடுமைகள் நடந்துள்ளன.

அவருக்கு வேலை வழங்கியவன் அவரின் உடல் முழுவதும் இரும்பாணிகளைச் செலுத்தியுள்ளான். பாலியல் வன்முறை சித்திரவதைகளுக்குள்ளான பெண்களும், பலசந்தர்ப்பங்களில் கொல்லப்பட்ட பெண்களின் சவப்பெட்டிகளும் கட்டுநாயக்கா வில் வந்திறங்குவது சர்வ சாதாரணமாகி வருகிறது.

அரசியல் சண்டியர்கள் பெண்கள் மீது நடத்தும் தூற்றுதல் அவதூறுகள் வன்முறைகள் என்பவற்றுக்கும் குறைவில்லை.

ஊடகத்துறையைச் சேர்ந்த பெண் ஒருவர் மீது நடத்தப்பட்ட மோசமான தாக்குதல் பலருக்கு ஞாபகமிருக்கும். அரசியலிலும் சினிமாவிலும் பிரபலமான பெண் ஒருவர் அண்மையில் உயிராப த்தை விளைவிக்கும் விதமாக அவரின் தலையில் அவரது கணவரால் தாக்கப்பட்டுள்ளார்.

யுத்த சூழ்நிலையில் திருமணம் செய்ய நிர்ப்பந்திக்கபட்டவர்கள் பலாத்காரமாக பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டவர்கள் உயிரிழந்தவர் கள் பெரும்பாலும் பெண்களும் சிறுமிகளுமாகவே காணப்படுகி ன்றனர். சில சிறுமிகள் தமது அவலத்தைப்பற்றி பங்கர்கள் காப்பரண்களிலிருந்து எழுதிய கடிதங்கள் மன அதிர்ச்சியை ஏற்படுத்துபவை.

1930 களில் சர்வசன வாக்குரிமை வழங்கப்பெற்ற நாடாக இலங்கை இருப்பினும் தீர்மானம் எடுப்பதற்கான நிலைகளில் அரசியலில் பெண்களின் பங்காற்றல் குறைவாகவே இருக்கிறது.

வவுனியா யாழப்பாணம் கிளிநொச்சி மாவட்ட செயலாளர்களாக பெண்களே இருக்கிறார்கள் எனினும், இலங்கையில் ஒட்டு மொத்த சமூக நிலைகளிலும் ஆணாதிக்க நிலைகளில் பெண் களுக்கெதிரான வன்முறைகளில் பெரிய மாற்றங்கள் எதுவும் ஏற்பட்டு விடவில்லை. பின்நோக்கிய நிலையே காணப்படுகிறது. வன்முறைகள் அதிகரித்துள்ளன.

யுத்தம், தேசிய விடுதலை இயக்கம் என்பவற்றால் பெண்களின் நிலையில் மாறுதல் ஏதும் ஏற்பட்டு விடவில்லை.

தேசிய விடுதலை இயக்கம் பாசிசமாக உருத்திரிபடைந்தபோது ஜனநாயக இயத்தினுள் செயற்பட்ட பெண்கள் கொல்லபட்டதோடு தெருவுக்கு விரட்டப்பட்டார்கள். அவர்கள் கால வெளியில் உரு வான கறுப்பு வெற்றிடத்தில் இழுக்கபட்டு உருவழிந்து போனார் கள். தனது யுத்த யந்திரத் தேவைக்காக பாசிசம் பெண்களை தற்கொலை குண்டுதாரிகளாகவும், துப்பாக்கிதாரிகளாகவும் அணிதிரட்டியது. பல சந்தர்ப்பங்களில் பலவந்தம் செய்தது- ஈவிரக்கமற்ற கட்டாய ஆட்சேர்ப்பு முறையாக. இதன் விபரீத விளைவு பேரினவாதம் பாலியல் பலாத்காரம், ஆட்கடத்தல் உட்பட பெண்ளுக்கெதிரான வன்முறை கட்டவிழ்த்து விட்டது.

தவிர, எமது சமூகத்தில் நிலவும் தீண்டாமைக் கொடுமைகளுடன் குறிப்பாக கிராமியத் தொழிலாளர்கள் என்ற அடிப்படையில் பேரினவாத ஒடுக்குமுறைகளுடன் மேலதிக சுமைகளைச் சுமந்தார்கள். யுத்தத்திலும் இந்த விளிம்பு நிலை பெண்களே பெருமளவுக்கு ஈடுபடுத்தப்பட்டார்கள். பெருமளவிற்கு பிள்ளை களின் இழப்பையும், வன்முறையையும் சந்தித்தார்கள். இது முழு வடக்கு கிழக்கிற்கும் பொதுவானது.

தவிர எல்லையோரக் கிராமங்களில் வாழ்ந்த பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் அடிக்கடி வன்முறை தாக்குதல் களை எதிர் கொண்டார்கள். பாலியல் துன்புறுத்தல்களுக்குள்ளா னார்கள். இவர்கள் அனுபவித்த துன்பங்கள் பற்றிய யதார்த்த சினிமாக்கள் வெளிவந்துள்ளன.

காணாமல்போதல் யுத்தத்தில் பிள்ளைகளைப் பலிகொடுத்தல் தமிழ் சிங்கள சமூகங்களிடையே பாரிய அளவு நடந்துள்ளது.

உடுத்த துணியுடன் விரட்டப்பட்ட வடபகுதி முஸ்லீம் பெண்கள் புத்தளத்திலும் அனுராதபுரம் போன்ற பகுதிகளிலும் அனுபவித்த துன்பங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

இந்த 3 வருடங்களும் நிகழ்ந்த இடம்பெயர்வு வங்க கடலை கடந்து அகதிகளாகச் செல்கையில் இறந்தவர்கள் அதிகமாக பெண்களும் குழந்தைகளுமே.

சுனாமி அனர்த்தம் கிழக்கு- தெற்கு- வடக்கு கரையோரங்களிலும், இந்தோனேசியா, இந்தியா, தாய்லாந்து போன்ற நாடுகளிலும் பெருமளவிற்கு பெண்களையே காவு கொண்டது. எமது கரையோ ரச் சமூகங்களில் பாரிய வெற்றிடத்தினை தோற்றுவித்துள்ளது.

மூதூர், மட்டக்களப்பு, வன்னி இடம்பெயர்வுகளில் அகதி முகாம் களில் பெண்கள் அனுபவித்த துன்பங்கள் அளவிட முடியாதவை.

அவர்கள் யுத்தத்தின் போதும் இடம்பெயர்வுகளின்போதும், சிறை சித்திரவதை முகாம்களிலும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத துன்பங்களை அனுபவித்தார்கள்.




யுத்தம் ஓய்ந்த பின்னர் புதிய வடிவங்களில் பெண்கள் மீதான வன்முறைகள் உருவாகியிருக்கின்றன. வன்முறையின் சாயல்கள் எமது சமூகத்திலிருந்து ஓய்ந்துவிடவில்லை. தற்போது நிகழும் ஆட்கடத்தல் காணாமல் போதலிலும் பெண்களே பெருமளவில் இலக்காகிறார்கள்.

திருமணம் என்பது மனிதர்களின் வாழ்க்கையில் நிகழும் முக்கிய நிகழ்ச்சி ஆனால், ஆணாதிக்க நிலையை வலியுறுத்தும் சடங் காசாரங்கள் இன்று பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்படுகின்றன.

பூப்புனித நீராட்டு விழா என்று சிறப்பு அழைப்பிதழ்கள் அச்சடிக்கப் படுகின்றன. மனித உடலில் நிகழும் இயற்கை மாறுதல்களுக்கு விழா எடுப்பவர்கள் உலகத்தமிழர். கேட்க சற்று வெட்கமாகத் தான் இருக்கிறது.

எமது சமூகத்தின் தாராதம்மியத்தை உணர்த்துவதாக இவை அமைந்துள்ளன.ஒரு கடைந்தெடுத்த பிற்போக்கு உணர்வுநிலை மட்டம் காணப்படுகிறது. எட்டுத்திக்கும் சென்றிருந்தாலும் பாமரராய், விலங்குகளாய் வாழ்கிறோம்.

கல்வி. தொழில் ஆகிய விடயங்களில் ஆண்களை விஞ்சிய நிலையில் பெண்கள் இருந்தாலும் சடங்காசாரங்கள் சம்பிர தாயங்கள் அவர்கள் மீது அடிமை உடைமைப் பிரகடனம் செய்கின்றன. வாழ்க்கையின் ஏணிப் படிகளில் அவர்கள் மேலே வர அவர்கள் பல சவால்களைச் சந்திக்க வேண்டியருக்கிறது.

தகவல்தொழில் நுட்பம் மல்டி மீடியாக்கள் போன்ற வசதிகள் பெண்களை ஆபாசமாகச் சித்தரிப்பதிலும் பிளக் மெயில் செய்வதிலும் பயன்படுகின்றன.

குறிப்பாக தமிழ் சூழலில் மெகா தொடர்களும், சினிமாவும் பெருமளவுக்கு பெண்களுக்கெதிரான வன்முறைகளை நியாயப்ப டுத்துகின்றன. அடங்கிப்போதல் பொறுமை என்ற மந்திர உச்சாட னங்களைச் செய்கின்றன. எத்தகைய வன்முறைகளையெல்லாம் பெண்களுக்கெதிராக பிரயோகிக்கலாம் என்ற புதிய புதிய கண்டு பிடிப்புக்களை எல்லாம் செய்கின்றன. பெண்களைப்பற்றிய ஒரு பாசிச மன நிலையுடன் இவை செயற்படுகின்றன. ஆனால் தமிழ் பெண்களில் ஒரு பகுதியினர் உலகளாவிய அளவில் இந்த மெகாத்தொடர் போதையில் கிறங்கிக் கிடக்கிறார்கள்.

ஒருசில விதிவிலக்குள் இருக்கின்றன. அங்காடித்தெரு திரைப்படம் நகர்ப்புற ஜவுளிக்கடைகளில் வேலை செய்யும் பெண்கள் அனுபவிக்கும் துன்பங்கள் பற்றிய அதிர்ச்சியான செய்தியை எமக்களிக்கிறது

பெரும்பாலானவை அடி. உதை, படுகொலை, சகித்துப்போ என்பது போல்தான் இருக்கின்றன. பாதகம் செய்பவரை கண்டால் நீ பயங்கொள்ளலாகாது பாப்பா மோதி மிதித்துவிடு பாப்பா அவர் முகத்தில் உமிழந்து விடு பாப்பா என்பது போல் விடயங் கள் இல்லை. யதார்தத்தை பிரதிபலிப்பதாகக் கூறி இந்த தொடர் தயாரிப் பாளர்கள் முடிவற்ற வன்முறையை சித்தரிக்கிறார்கள். இதுவே சமூக நியதி என மனதில் பதிய வைக்கப்படுகிறது.

பெண்களைப்போகப் பொருளாக சித்தரிக்கும் போக்கு உலகமயமாக்கலுடன் முன்னெப்போதும் கண்டிராத அளவிற்கு மோசமடைந்துள்ளது

தமிழில் மட்டரகமான ஆண் மேலாதிக்கம் கொண்ட இரட்டை அர்த்தப்பாடல்கள், குரூர நகைச்சுவைகள் அதிகரித்துள்ளன.

உயிரியல் தொழில் நுட்பத்தை வைத்து பிறக்கும் குழந்தை ஆணா பெண்ணா என கருவிலேயே தீர்மானித்து அழித்து விடும் போக்குள் அதிகரித்துள்ளன.

ராஜம் கிருஸ்ணனின் மண்ணகத்துப் பூந்தளிர்கள் நாவலில் வரும் கள்ளிப்பால் பருக்குவது, மூக்கினுள் நெல்மணியைச் செலுத்துல் எல்லாம் மாறி பெண் குழந்தைகளை கருவறுக்கும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

தமிழ் சமூகத்தில் பெண்களின் பண்பாட்டு புரட்சி ஒன்று தேவைப்படுகிறது. அதுவும் ஒரு சமூக இயக்கமாக முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும்.

இந்த விடயத்தில் தமிழர்கள் மத்தியில் நிலவும் ஆதிக்கக் கரு த்துக்கள் மிகவும் கயமைத்தனம் நிறைந்ததும் நயவஞ்சகத் தனமானது என்பதிலும் எதுவித ஐயமும் இல்லை.

அதனால் தான் வரலாற்று வெளிப்பாடாக தந்தை பெரியார் தோன்றினார். தந்தை பெரியாரின் முனைப்பான போராட்டம் சாதியமைப்பு பெண்ணடிமைத்தனம் இவற்றுக்கெதிராகவே திரா விடப் பேரியக்கம் இருந்த சூழலில் தமிழகத்தில் ஜனரஞ்சக சினிமாவில் எங்காவது பெரியாரின் சுயமரியாதை திருமணத்தைப் பார்த்திருக்கிறீர்களா? பட்டிதொட்டியெல்லாம் பெரியார் இயக்கம் நடத்தியே அதனைச் செய்யமுடியவில்லையே.

பெண்கள் பலதுறைகளில் சவால்களுக்கு மத்தியில் முன்னேறி இருந்தாலும் .பெண்கள் இரண்டாம் பட்சமானவர்கள் அவர்களை இரட்சிக்க கதாநாயகர்கள் தேவை என்றெல்லவா வலியுறுத்தப் படுகிறது. பெண்களின் சுதந்திரதிற்கான இயக்கம் ஒரு தொடர் போராட்டமாகும். பொருளாதார சமத்தும் கல்வி என்பன இங்கு முக்கியமான விடயங்கள். இன்று பெருமளவிற்கு ஊதியமில்லாத உழைப்பாளர்கள் கீழைத்தேசத்துப் பெண்களே.

குடும்ப உழைப்பிற்காக பெண்களுக்கு எதுவும் தரப்படுவதில்லை.

வன்முறையற்ற சமூக சூழல், சட்டங்களில் பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கெதிராக மாற்றம் கொண்டு வருதல், மரபுரீதியான சம்பிரதாயங்கள் தளைகளிலிருந்து விடுதலை சமூகப்பாதுகாப்பு கல்வி உத்தரவாதம் என்பன இங்கு முக்கியமான விடயங்கள்.

இந்தியாவில் பெண்களுக்குமேல் ஆண்கள் புரியும் அத்துமீறல் களுக்கெதிராக அண்மையில் கடுமையான சட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.மகளிர் காவல்நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையிலும் இத்தகைய அணுகுமுறைகள் தேவை

தமிழ் அரசியல் அரங்கைப் பொறுத்தவரை அதில் எத்தனை பெண்கள் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை வைத்தே தமிழ் அரசியலின் தார்மீகத்தனத்தை நாம் புரிந்து கொள்ளமுடியும்

மிகவும் வளர்ச்சியடைந்ததாகச் சொல்லப்படும் நாடுகளில் கூட மிகவும் விகாரமான முறையில் பெண்களின் மீது வன்முறை பிரயோகிக்கப்படுவதை நாம் பார்க்க முடியும்.

அமெரிக்காவில் பாடசாலை சிறுமியை 20 வருடங்களுக்கு முன்னர் கடத்தி பாலியல் பலாத்காரம் புரிந்ததையும், இவ்வளவு காலமும் அச்சிறுமியை வீட்டினுள்ளே சிறைவைத்திருந்ததையும், அண்மையில் தான் பொலிஸார் அப்பெண்ணை மீட்ட செய்தியை யும் இது போன்ற பல வக்கிர குரூர வன்முறைகளையும் கேள் விப்பட்டிருக்கிறோம்.

மத ஒழுக்கத்தின் பெயரில் மரபுகளின் பெயரில் ஒழுக்கத்ததை மீறியதாக பெண்கள் மீது பலர் பலாத்காரம் புரிந்த செய்திகளையும் நிர்வாண ஊர்வலங்கள் நடத்தப்பட்ட செய்தியையும் நாம் அடிக் கடி கேள்விப்படுகிறோம். இவ்வாறு பாதிக்கப்படும் பெண்களுக்கு உடனடியாக சட்டம் ஆதரவாக இல்லை சமூகமும் ஆதரவாக இல்லை. பாகிஸ்தானில் இத்தகைய சம்பவங்களை அடிக்கடி கேள்விப்படுகிறோம்.

அன்றாடம் லட்சக்கணக்கான பெண்கள் உலகளாவிய அளவில் துன்புறுத்தல்களுக்குள்ளாகிறார்கள்.

அங்சாங்சூஜி மியன்மார் மக்களின் மனங்கவர்ந்த ஜனநாயக இயக்கத்தின் தலைவி. மியன்மாரின் இராணுவ ஆட்சியாளர்கள் உலகமே எதிர்த்து நின்றபோதும் அவருக்கெதிரான அச்சுறுத் தல்களை தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

எனினும் ஒருகாலத்தில் இடதுசாரி இயக்கத்தின் கெரில்லாப் போராட்டக்காரர் இராணுவ சிறைகளில் சித்திரவதைகளை அனுபவித்தவர் டில்மா, பிரேசிலின் ஜனாதிபதியாகியிருக்கிறார்.

ஒடுக்கப்பட்ட சமூகப் பின் புலத்தில் வந்த மீரா குமார் இந்தியாவின் சபாநாயகர் ஆகியிருக்கிறார். ஆனால் உலகில் பால் நிலை சமத்துவம் வேண்டி நெடுந்தூரப் பயணமொன்றை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



எனது மனமார்ந்த தமிழ் - சிங்கள புத்தாண்டு வாழ்த்துக்களை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த புதுவருட நாள் தமிழருக்கும் சிங்களவருக்கும் பொதுவான கொண்டாட்ட நாள். இந்த நாள் இலங்கையின் தமிழருக்கு மட்டுமல்ல உலகம் முழுவதிலுமுள்ள தமிழர்கள் அனைவருக்கும் புதுவருட நாள். ஒவ்வொரு வருடமும் இந்தநாளுக்கு முதல்நாள் எப்போதும் சீக்கியர்களுக்கும் புதுவருட நாள். சமய அடிப்படையில் பார்த்தால் இது இந்துக்களுக்கும் புனிதநாள். ஆனால், இந்துக்கள் என்ற அடிப்படையில் இது புது வருட நாளல்ல. இந்துக்களுக்கு சூரியனை வழிபடும் புனித நாட்களில் இதுவும் ஒரு பிரதானமான நாள்.

இந்த நாள் தமிழருக்கும் சிங்களவருக்கும் பிரதானமான பொதுக் கொண்டாட்ட நாளாக இருந்தும் இரு சமூகத்தவரும் இந்த நாளில் ஒன்று சேர்ந்து கொண்டாடுவது என்றில்லை. இந்த நாளை இரு சமூகத்தவரும் ஒன்று சேர்ந்து கொண்டாடுவதற்கான எந்த முயற்சியையும் எந்தவொரு சமூகத்தையும் சேர்ந்த அரசியற் தலைவர்களோ அல்லது சமூகத் தலைவர்களோ அல்லது மதத் தலைவர்களோ முன்னெடுக்கவில்லை. பொதுவாக தமிழர்கள் இதனை தமிழ்ப் புத்தாண்டு என்றும் சிங்களவர்கள் இதனை சிங்களப் புத்தாண்டு என்றுமே கொண்டாடுகிறார்கள். கௌதம புத்தர் ஒரு சிங்களவரல்ல, ஒவ்வொரு பௌர்ணமி தினமும் இந்துக்களுக்கும் புனித தினமே. எனவே தமிழர்களுக்கும் அது புனிதநாளே!

இலங்கையிலுள்ள மதங்களை உறவுபடுத்திப் பார்த்தால் இந்து சமயத்துக்கும் பௌத்த சமயத்துக்கும் அடிப்படையான வேறுபாடு கிடையாது. இந்திய உபகண்டத்தின் பாரம்பரியத்தின்படி சைவமதம், ஜைனமதம் மற்றும் வைஷ்ணவ மதங்கள் போல பௌத்த மதமும் இந்து சமயத்தின் ஒரு பாகமே. ஏனைய இந்துக்களின் கோவில்களில் கௌதம புத்தரை வழிபடுதல் இல்லையென்றாலும் எல்லா பௌத்த கோவில்களிலும் விஷ்ணுவை, விநாயகரை, கந்தனை, அம்மனை வைத்து வழிபடுவதைக் காணலாம். இந்தக் கடவுள்களே இலங்கையின் பௌத்தர்களுக்கும் வரம் தரும் கடவுள்களாவர். சத்யசாயி பாபாவின் பக்தர்களாக ரணில் விக்கிரமசிங்கா தொடக்கம் பெருந்தொகையான சிங்களப்பிரமுகர்கள் இருக்கிறார்கள். இலங்கையின் ஜனாதிபதி உட்பட பெருந்தொகையான சிங்களத் தலைவர்கள் தமது வெற்றிக்கு கௌதம புத்தரை விட கதிர்காமக்கந்தனையும் திருப்பதிப் பெருமாளையுமே நம்புகின்றனர்.

பௌத்தம் இலங்கைக்கு வடஇந்தியாவிலிருந்து திராவிட தேசங்களுக்கு மேலால் பறந்து வந்திருக்க முடியாது. தமிழகத்தில் பரவிய பௌத்தமே இலங்கைக்கும் பரவியது என்பதே சாத்தியம். மகாவம்சத்துக்கு பல நூற்றாண்டுகளுக்கு முந்திய தமிழ் இலக்கியங்களான சிலப்பதிகாரம் மற்றும் சீவக சிந்தாமணி ஆகியவற்றில் இருந்து தமிழர்கள் மத்தியில் பௌத்தம் பரவியிருந்ததை அறிய முடிகின்றது. எனவே அக்காலகட்டத்தின் யாழ்ப்பாணத் தமிழர்கள் மத்தியிலேயே இலங்கையில் முதலில் பௌத்தம் அறிமுகமானது என்று வாதிடவும் வாய்ப்பு உண்டு. அதனடிப்படையில் கந்தரோடையில் காணப்படுவது தமிழ் பௌத்தர்களின் தளமே தவிர சிங்களவர்களின் தளம் அல்ல என்று கொள்ளவே அதிக வாய்ப்புக்கள் உள்ளன. தேவநம்பிய தீசன் பௌத்தத்தை வரவேற்றான் என்பதற்காக அவன் தமிழர்களை வெறுத்தான் என்பதோ அல்லது தமிழர்கள் தேவநம்பிய தீசனை எதிர்த்தார்கள் என்று கூறுவதோ சரியானதல்ல.

தமிழிலிருந்து தெலுங்கு வேறுபட்டஒரு தளத்தில் வளர்ந்ததைப் போல கன்டம் இன்னொரு தளத்தில் வளர்ந்ததைப் போல சிங்களமும் இலங்கையின் தெற்கில் வேறுபட்ட வளர்ச்சியைக் கண்டதென்று சொல்லலாமே ஒழிய சிங்களம் திராவிட மொழிக் குடும்பத்திலிருந்து முற்றாக வேறுபட்ட தளத்தில் வளர்ந்த மொழி என்று கூற முற்படுவது ஓர் அறியாமையே. தமிழுக்கு எவ்வாறு ஒரு தனித்துவமான வளர்ச்சியுண்டோ அதேபோலவே சிங்களத்துக்கும் ஒரு தனித்துவமான வளர்ச்சியுண்டு. ஆனாலும் இரண்டும் ஒரே குடும்பத்தின் மொழிகள். இன்னும் சொல்லப் போனால் தமிழுக்கும் சிங்களத்துக்கும் உள்ள அளவு உறவு வேறெந்த மொழிக்கும் தமிழுக்குமோ அல்லது சிங்களத்துக்குமோ கிடையாது. அந்த வகையில் திராவிட மொழிக் குடும்பத்தில் கூட தமிழுக்கும் மலையாளத்துக்கும் சிங்களத்துக்கும் இடையிலேயே மிகவும் நெருக்கமான உறவுகள் இன்றும் நிலவுகின்றன என்று என்னால் உறுதியாகக் கூறமுடியும்.

கிறிஸ்துவிற்கு முன் பல நூற்றாண்டுகள் தொடக்கம் இருபதாம் நூற்றாண்டு வரையான வரலாற்றைப் பார்ப்பின் தமிழகத்தின் மற்றும் கேரளத்தின் சமய, மொழி மற்றும் கலாச்சாரச் செல்வாக்குகளே இலங்கையின் வடக்கு, மேற்கு மற்றும் கிழக்கு கரையோரங்களில் செல்வாக்குச் செலுத்தி வந்திருக்கின்றன என்பதைக் காண முடியும். தமிழர்கள் மீது பௌத்தத்தையோ சிங்களத்தையோ திணிக்கும் முயற்சியை சிங்கள மன்னர்கள் எவரும் முயன்றதாக வரலாறு இல்லை. அதே போல சிங்களவர்கள் மீது தமிழையோ இந்து மதத்தையே திணிப்பதற்கு எந்தத் தமிழ் மன்னனும் முயன்றது கிடையாது.

இருபதாம் நூற்றாண்டில் பிரித்தானியர்களால் தேர்தல் அரசியல் இலங்கையில் அறிமுகப்படுத்துவதற்கு முதலில் எந்தக் கால கட்டத்திலும் அரசியலுக்கும் மொழிக்கும் மத நம்பிக்கைகளுக்கு இடையே எந்தவிதமான தொடர்பும் இருக்கவில்லை என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இலங்கையில் சமஷ்டி அமைப்பு வேண்டுமென்று கண்டிய சிங்களத் தலைவர்கள் கேட்ட போது எந்தவொரு அதிகாரப் பகிர்வையும் கோராதவர்கள் தான் தமிழ்த் தலைவர்கள். இலங்கையில் சங்கிலியன் ஆண்டான், வன்னியைப் பண்டார வன்னியன் ஆண்டான், கண்டியை விக்கிரம ராஜசிங்கன் ஆண்டான், பிரித்தானியர்கள் வர முதலில் இலங்கையில் மூன்று ராஜ்ஜியங்களே இருந்தன என்பதையெல்லாம் தமிழ்த் தலைவர்கள் 1949ம் ஆண்டுக்கு முன்னர் எப்போதும் சொன்னதில்லை. அப்படிச் சொன்ன சிங்களவர்களையும் அரசியற் பைத்தியக்காரர்காரர்களாகவே அன்றைய தமிழ்த் தலைவர்கள் பார்த்தார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

சிங்களவர்களை ஆரிய இன வழி வந்தவர்கள் என்பதுவும் சிங்களத்தை ஆரிய அடி வந்த மொழி என்பதுவும் தவறு. சமஸ்கிருதத்தின் செல்வாக்கு தமிழில் குறைவாக இருக்கலாம் ஆனால் தெலுங்கில் கன்னடத்தில் மலையாளத்தில் எந்த அளவு சமஸ்கிருதத்தின் செல்லாக்கு உள்ளதோ அதே அளவில்த்தான் சிங்களத்திலும் உள்ளது. பௌத்த மதத்தின் ஊடாக பாளியின் செல்வாக்கும் சிங்களத்தில் ஓரளவு உள்ளது. தமிழ் அடிச் சொற்கள் சிங்களத்திலும் கணிசமாகப் பாவனையில் இருப்பதைக் காணலாம்.

தமிழ் மற்றும் சிங்கள எழுத்து வரி வடிவங்களின் வரலாற்று வளர்ச்சியை எடுத்துக் கொண்டால் திராவிட மொழிக் குடும்பத்தின் எழுத்து வடிவங்களில் ஒன்றாகவே சிங்களமும் உள்ளது. தெலுங்கு, கன்னடம், ஒரியா ஆகியவற்றின் எழுத்து வரி வடிவங்களைத் தெரியாதவர்களே சிங்கள எழுத்து வடிவங்கள் பற்றி தப்பான கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். சிலர் விஜயன் கதையை வைத்துக் கொண்டு வங்காளத்துக்கும் சிங்களத்துக்கும் இடையில் ஒரு தொடர்பை ஏற்படுத்தப் பார்க்கிறார்கள். வங்காள மொழி மற்றும் ஒரியா மொழிகளில் சமஸ்கிருதம் மற்றம் பாளியன் செல்வாக்கு கணிசமாக இருப்பினும் வங்காள எழுத்து வடிவம் சமஸ்கிருத எழுத்து வடிவங்களின் குடும்பத்தையே சேர்ந்ததாகும். இந்திய மொழிகள் அனைத்துக்கும் பிராம்மிய எழுத்து வடிவமே அடிப்படையாயினும் சிங்களத்துக்கும் சமஸ்கிருதத்துக்கும் இடையே உள்ள எழுத்து வடிவ உறவை விட சிங்களத்துக்கும் திராவிட மொழிகளுக்கும் உள்ள உறவே மிக மிக நெருக்கமானதாகும்.

மொழிகளின் இலக்கணத்தை ஒத்து நோக்கினாலும் எண்களைச் சொல்லும் விதத்தை நோக்கினாலும் தமிழுக்கும் சிங்களத்துக்குமே நெருங்கிய உறவுண்டு. அந்தளவு உறவை வட இந்திய மொழிகளுக்கும் சிங்கள மொழிக்குமிடையே காண முடியாது.

தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையே இன முரண்பாடுகளை உருவாக்கி வளர்த்தது இருபதாம் நூற்றாண்டின் அரசியல் வரலாறே. இந்த நிலைமை இருபதாம் நூற்றாண்டுக்கு முதலில் இருந்ததில்லை.

இலங்கையை பௌத்த சிங்கள ஆதிக்கம் கொண்ட நாடாக ஆக்க வேண்டும் என்று முயல்வோருக்கு துணையாக பௌத்த பிக்குகள் அரசியலில் செல்வாக்குச் செலுத்துவதுவும், அவ்வாறானவர்கள் பௌத்த கோவில்களை சிங்கள இன ஆதிக்கத்தை விரிவுபடுத்துவதற்கான கருவியாகப் பாவிப்பதும்தான் இங்கு சிக்கல்களை உருவாக்கி இனங்களுக்கிடையிலான அவநம்பிக்கைகளை வளர்த்து விட்டிருக்கின்றன. தமிழர்கள் புத்தர் சிலைகளையும் அரச மரங்களையும் கண்டாலே அஞ்சும் நிலை இங்கு உருவாக்கப்பட்டிருக்கின்றது. தமிழர்களின் பிரதேசங்களில் சிங்களவர்களைத் திட்டமிட்டுக் குடியேற்றும் அரச திட்டங்களின் ஒரு பகுதியாகவே இன்று தமிழர் பிரதேசங்களில் பௌத்த ஆலயங்களைப் பார்க்கும் நிலைமை ஏற்பட்டதாலேயே கௌதம புத்தரை வழிபடுதலும் பௌத்த வழிகாட்டல்களைக் கடைப்பிடித்தலும் தமிழர்களிடத்தேயிருந்து அந்நியப்படுத்தப்பட்டிருக்கின்றன. இது வேதனைக்குரியதொரு நிலைமையே.

மொழியால், வழிபாட்டால், மதச் சிந்தாந்தங்களால், கலாச்சாரத்தால், பல்வேறு சாஸ்த்திர நம்பிக்கைகளால் இன்றும் சிங்களவர்களும் தமிழர்களும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர். இருந்தும் பதவி வெறி பிடித்த இனவாத அரசியலால் இரண்டு இன மக்களும் ஒருவருக்கொருவர் பகைவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு இனத்தவரால் மற்ற இனத்தவர் அச்சுறுத்தப்படும் நிலைக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கிறார்கள்.

ஏழு கோடித் தமிழர்கள் இருக்கிறார்கள் சிங்களவர்கள் ஒன்றரைக் கோடிப்பேர் தான் இருக்கிறார்கள், எனவே இலங்கையை விட்டால் தமக்கு வேறு வழியில்லையே என சிங்களவர்கள் மத்தியில் ஒரு கீழ் நோக்கிய அச்ச மனப்பான்மை வளர்க்கப்பட்டிருக்கின்றது. மாறாக இலங்கையில் சிங்களவர்கள் எழுபத்தைந்து வீதமாக இருக்கிறார்கள் ஆனால் தமிழர்கள் இருபது வீதம் பேர் மட்டும்தானே இருக்கிறோம் என தமிழர்கள் இனரீதியான அச்ச மனோநிலையோடுதான் வாழ்கிறார்கள். இலங்கைத் தமிழர்கள் தமிழகத் தமிழர்களைத் தமது பலமாகக் கருதினாலும் தமது பாகமாகக் கருதுவதென்பது மிகக் குறைவே. இலங்கைத் தமிழர்கள் மத்தியில் தாம் இலங்கையர் என்ற நம்பிக்கை உணர்வு உறுதியாக வளர்ந்திருக்கிறதோ இல்லையோ ஆனால் இலங்கைத் தமிழர்கள் தம்மை எந்த வேளையிலும் இந்திய வம்சாவழித் தமிழரின் ஒரு பகுதியாகத் தம்மைப் பார்க்க விரும்பவில்லை என்புது தெளிவான ஒரு விடயமாகும்.

இலங்கையில் தாங்கள்தானே பெரும்பான்மையினர் எனவே சிறுபான்மையினரான தமிழர்கள் மீது தாம் ஒரு அச்சமற்ற நம்பிக்கையை வளர்க்க வேண்டுமென்ற எண்ணம் சிங்களவர்கள் மத்தியில் பரவலாக இல்லை. அதேபோல மறுபுறமாக இந்தப் புவியியற் பிராந்தியத்தில் மொழி ரீதியாக தாங்கள்தானே மிகப் பெரும்பான்மையினர் எனவே அது பற்றிய அச்சம் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படாது தாம் செயற்பட வேண்டும் என்ற அக்கறை இலங்கைத் தமிழர்கள் மத்தியிலுமில்லை.

அன்பார்ந்த

நண்பர்களே!

ஆற்றல் மிகு

தோழர்களே!

அ.வரதராஜப்பெருமாள்

சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் நல்லுறவை வளர்க்க, பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்த, ஒருவரையொருவர் சமத்துவமான சகோதரர்களாக ஒத்துழைத்து வாழும் நிலையை உருவாக்குவதற்கு இலங்கையில் வல்லமைமிக்கவர்களாக நல்ல அரசியற் தலைவர்கள் இல்லை, சீரான எண்ணம் கொண்ட துணிச்சலான சமூகத் தலைவர்கள் மிகக் குறைவே, இனவாத அரசியலுக்கு அப்பால் மக்களை அணிதிரட்டி வழி நடத்தும் பக்குவம் கொண்ட மதத் தலைவர்கள் அரிதே. இலங்கையின் அறிஞர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய கர்த்தாக்கள், கலைஞர்கள் எனும் அனைத்து புத்திஜீவிகளும் இரு பகுதியினத்திலும் அதிகப் பெரும்பான்மையானோர் இனவாதத்தால் அள்ளுண்டு பிளவுபட்டுப் போயிருக்கிறார்கள்.

இலங்கை காலனித்துவத்தின் பிடியிலிருந்து விடுபட்டு ஆறு தசாப்தங்கள் கடந்து போய்விட்டன. ஆனாலும் இன்னமும் இலங்கையர் அனைவர் மத்தியிலும் நாம் அனைவரும் இலங்கையரே என்ற தேச உணர்வு கட்டியெழுப்பப்படவில்லை என்பதே உண்மை.

சிங்களவர்களே இலங்கையர்கள்! சிங்களவர்களே இலங்கையின் முதற்தரப் பிரஜைகள்! சிங்களவர்களுக்கு மட்டுமே இலங்கை சொந்தம் என்ற வகையான உணர்வை வளர்க்கும், அவ்வாறான நிலையை நிலைநாட்டும் முயற்சிகளையே பெரும்பாலும் சிங்கள இன அரசியற் தலைவர்கள் முயன்று வந்திருக்கிறார்கள்.

தமிழர்கள் மத்தியில், இலங்கையில் தமிழர்களும் சரிசமப் பிரஜைகளே! தமிழர்களுக்கும் இங்கு ஆட்சி அதிகாரத்தில் பாரபட்சமற்ற பங்கு உண்டு! அரசு இங்கு எல்லா மொழிகளையும் எல்லா மதங்களையும் பாரபட்சமின்றியே பாதுகாக்கும்! பராமரிக்கும்! அரச நிர்வாகத்திலும் அரச படைகளிலும் எல்லா இனத்தவர்களுக்கும் உரிய பங்கு கணிசமாக வழங்கப்படும் என்ற நிலைமைகளை உருவாக்குவதற்கான முயற்சிகள் எதுவும் நம்பத்தகுந்த விதமாக முன்னெடுக்கப்படவில்லை.

தமிழர்கள் எங்கே தாங்கள் தமது தேசிய அடையாளத்தை தமிழர்கள் என்பதற்கு முதலில் இலங்கையர்கள் என்று கொண்டால் தமிழர்கள் எனும் தமது தேசிய அடையாளம் இல்லாதொழிந்து போகுமோ என அச்சப்படும் நிலையே இங்கு வளர்க்கப்பட்டிருக்கின்றது.

தமிழ்நாட்டு விடுதலையே தமிழருக்கு விடுதலை என்று ஒரு காலகட்டத்தில் முழங்கிய அறிஞர் அண்ணா அவர்கள் சுதந்திர இந்தியாவின் முற்போக்கான வளர்ச்சிகளின் விளைவாக தனது நிலையை மாற்றி தான் ஒரு தமிழன் என்பதில் பெருமைப்படுவதாகக் கூறியதோடு அதைவிடவும் ஒருபடி மேலாக தான் ஒரு இந்தியன் என்பதில் பெருமைப்படுகிறேன் என்று பிரகடனப் படுத்தினார். ஆனால், அப்படி ஒரு நிலை மாற்றத்துக்கு இலங்கைத் தமிழ்த் தலைவர்களை இட்டுச் செல்ல வேண்டிய கடமைப்பாடு சிங்களத் தலைவர்களுக்கே உண்டு.

எழுபத்தைந்து சதவீதமான சிங்களவர்களின் வாக்குகள் போதும் இருபத்தைந்து சதவீதமான தமிழ்ப் பேசும் குடிமக்கள் பற்றி தாம் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை என்று செல்வாக்கு மிக்க சிங்களத் தலைவர்கள் கருதுவார்களேயானால் அவர்கள் இலங்கைத் தீவை ஒரு சிங்கள தேசம் மற்றும் தமிழ்த் தேசம் என்ற பகைமை நெருக்கடிகளிலிருந்து விடுவிக்க விரும்பவில்லை என்பதே அர்த்தமாகும்.

இலங்கையில் தமிழர்களும் சிங்களவர்களும் ஒற்றுமையாக சகோதரர்களாக ஒருவரோடு ஒருவர் பரஸ்பர நலன்களை மதித்துப் பேணுபவர்களாக வாழ வேண்டும் என்பதைத் தமிழ் சமூக அரசியற் தலைவர்கள் தமிழர்கள் மத்தியில் வளர்க்க வேண்டும்.

அவ்வாறு ஒற்றுமையாக சமத்துவமான சகோதரர்களாக பரஸ்பரமாக நலன்களை மதித்துப் பேணி வாழ்வதற்கான அரசியல் பொருளாதாரக் கட்டமைப்புகளைக் கட்டியெழுப்புவதுவும் நம்பிக்கைகளை வளர்க்கும் வகையான அரசியல் பொருளாதாரத் திட்டங்களை மேற்கொள்ளுவதுவும் சிங்கள அரசியற் தலைவர்களின் கடமையாகும்.

ஏப்ரல் 14ல் வருவது தமிழ் - சிங்கள புத்தாண்டாக அல்லாமல் இலங்கையர்களின் புத்தாண்டாக இலங்கையின் அனைத்து இன மக்களும் கொண்டாடும் நாளாக இது அமைய வேண்டும். அந்த வரலாற்று நாளுக்காகக் காத்திருப்போம் அதற்காக எம்மால் முடிந்தன அத்தனையும் செய்வோம்.

இப்படிக்கு

உங்கள் அன்பின்
அ. வரதராஜப்பெருமாள்

www.padippakam.com



# தமிழ் தேசிய சமூக இயக்க வரலாற்றிலிருந்து பிரிக்க முடியாத தோழர் புஸ்பராசா



1977 இல் அமிர்தலிங்கத்துடன்

**தோ**ழர் புஸ்பராசா அவர்கள் மறைந்து 5 ஆண்டு கள் உருண்டோடிவிட்டன. அவர் தனது 55 வது வயதில் 10.03.2006 இவ் உலகைவிட்டுப் பிரிந்தார்.

தனது மரணத்தின் நாள் முன் கூட்டியே சில நாட்களுக்கு முன் அவருக்கு தெரிந்திருந்தது. 'வெடிமருந்து வீச்சமில்லாத தாயகத்தின் தெரு வில் தனது பிள்ளைகள் உலாவும் காலம் வர வேண்டும்' என்று அவர் கனவு கண்டார்.

மாணவர் -இளைஞர் பேரவைகளினூடாக தமிழ் தேசிய அரசியலில் பிரவேசித்த புஸ்பராசாவும் அவர் சகோதரி புஸ்பராணியும் 1970களின் முற் பகுதியில் வதைமுகாம்களில் சித்திரவதைகளை அனுபவித்தவர்கள் .

இலங்கைத் தமிழர் வரலாற்றில் அரசியல் காரண ங்களுக்காக சித்திரவதை செய்தல் கொலை செய்தல் ஆரம்பமான காலம் இது.

சிங்கள இளைஞர்கள் மீது சமகாலத்திலேயே சித்திரவதைகள் ஆரம்பித்திருந்தன.

ஆரம்பத்தில் அஹிம்சை சத்தியாக்கிரக இயக் கங்களில் பங்கு பற்றிய, முன்நின்று நடத்திய புஸ்பராசா அன்றைய ஈழத்தமிழ் இளைஞர்கள் மத்தியில் மிகவும் பிரபலமானவர்.

பின்னர் 1970களின் நடுப்பகுதியில் தமிழீழ விடு தலை இயக்கத்தை உருவாக்கியவர்களில் (தற் போதைய ரெலோ அல்ல) புஸ்பராசாவும் ஒரு வர். தோழர் வரதராஜப்பெருமாள் போன்றவர்கள் இவரின் சகபாடிகளாக இருந்தனர்.

1974 தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைகளின் பின்னர் தீவிர செயற்பாட்டாளராக மாறியிருந்தார்.

அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதில் அன் றைய தமிழ் அரசியலின் போதாமை அவருக்கு விரக்தியை ஏற்படுத்தியிருந்தது

1980களின் முற்பகுதியில் அவர் பிரான்சுக்கு புலம்பெயர்ந்து சென்றார். அதே காலப்பகுதியல் பிரான்சுக்குப் போவதற்கு சில மாதங்களுக்கு முன்னர் புஸ்பராசாவும் நானும் குன்சியும் ஒரு மத்தியானம் கீரிமலையிலிருந்து புறப்பட்டு மாலையில் வேதாரணியம் கடற்கரையில் இறங்கினோம். இரவு வேதாரணியம் சவுக்கந் தோப்பொன்றில் தங்கிவிட்டு மறுநாள் காலை தஞ்சாவூரில் தோழர் புஸ்பராசாவிற்கு அறிமுக மான தந்தை பெரியாரின் கொள்கைகளில் தீவிர ஈடுபாடு கொண்ட குடும்பம் ஒன்றுடன் தங்கிவிட்டு சென்னை சூளைமேடு வகாப்தெருவிற்கு வந்து சேர்ந்தோம். இலங்கை அரச பயங்கரவாத அச் சுறுத்தல் காரணமாக இந்தியா வந்திருந்த சில இளைஞர் களும் அங்கிருந்தார்கள்.

தோழர் பத்மநபா எவிடன்ஸ் (Evidence) பத் திரிகைக்களித்த பேட்டியில் புஸ்பராசா புஸ்ப ராணி ஆகியோரின் பங்களிப்பு பற்றிய பகுதி களை காண்பித்துக் கொண்டிருந்தார்.

பின்னர் தோழர் புஸ்பராஜா பிரான்சிற்குச் சென்று விட்டார். நீண்டகாலம் அவரை ஒரு தேசியவாதி யாக அறிந்திருக்கிறேன்.

1980களின் முற்பகுதியில் அவர் ஈபிஆர்எல்எப் உடன் நெருங்கிச் செயற்பட்டார். பிரான்சில் அரசியல் தஞ்சம் கோரி வந்த பலருக்கு அவர் உதவியிருக்கிறார்.

காலஞ்சென்ற தோழர் உமாகாந்தன் ,புலிகளால் படுகொலை செய்யப்பட்ட சபாலிங்கம் போன்ற வர்களுடன் அவர் நெருக்கமாகச் செயற்பட்டி ருக்கிறார்.

1980 களில் அவர் பிரதானமாக தேசியவிடு தலையுடன், தீண்டாமை பெண் அடிமைத்தனம் -விழிம்புநிலை மக்கள் தொடர்பான அக்கறைக ளும் அவரின் நிகழ்ச்சி நிரலில் சேர்ந்து கொண்டன.

கட்டுரை, சிறுகதை, கவிதை என அவர் பல ஆக்கங்களை எழுதியிருப்பதாக அறிகிறேன். ஒரு சிலவற்றை அவ்வப்போது வாசித்துமிருககிறேன்

அவரது குடும்ப சூழலில் அவரது மனைவியார்

மீரா, சகோதரி புஸ்பராணி ஆகியோரின் பங்களிப் பும்- உறுதுணையும்- அனுபவமும் முக்கியமா னவை என அறிகிறேன்.

கடந்த 2 தசாப்தங்களுக்கு மேலாக ஐரோப்பிய வடஅமெரிக்க புலம்பெயர் தளத்தில் நிகழ்ந்து வந்த இலக்கியச் சந்திப்பு, பெண்கள் சந்திப்பு எழுத்துக்கள் பரிமாறல்கள் அவர் மேல் செல்வா க்குச் செலுத்தியுள்ளன.

தவிர தமிழகத்திற்கும் கேரளாவிற்கும் அடிக்கடி சென்று சமூக இலக்கியப்பிரக்ஞை உள்ள மனிதர்களுடன் அவர் தன்னைப் பரிச்சயப் படுத்தியிருக்கிறார்.

அவர் வெடிமருந்து வீச்சமில்லாத தெருக்களை வேண்டினார். ஆனால் அவர் நேசித்திருக்கக் கூடிய அவரது ஊர் மயிலிட்டி இன்னும் உயர் பாதுகாப்பு வலயமே. சொந்த கிராமம் -அதன் வாழ்வும் வளமும் அழிக்கப்பட்டு விட்டது என்ற வலி இருக்கிறதே அது பயங்கரமானது.

எமது சமூகத்தில் பலரது அனுபவம் போலவே அவரும் உற்ற, சுற்றம், உறவுகளை இழந் திருக்கிறார்.


'ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம்' என்ற அவரது அனுபவத்தொகுப்பு ஈழத்திலும், தமிழ கத்திலும், புலம்பெயர்தளத்திலும் நன்கு அறியப்பட்டது.

இப்போது அவரது ஆக்கங்கள் சிலவற்றை பிரசுரிப்பதற்கான முயற்சிகள் நடைபெறுவதாக அறியப்படுகிறது.

தமிழ் தேசிய சமூக இயக்க வரலாற்றில் தோழர் புஸ்பராசா அவர்களுக்கும் குறிப்பிடத்தகுந்த இடமுண்டு. அவரின் கனவான வன்முறை ஒழி ந்த சுதந்திரமுழ் சமத்துவமும் சமாதானமும் நிலவும் வாழ்வு மெய்ப்படவேண்டும்.

— சுகு —

## நினைவு கூருகின்றோம்







| | | | | |
|---|---|---|---|---|
| தோழர் சிவா<br>பெரியகல்லாறு<br>28.03.1986 | தோழர் குமார்<br>தம்பிலுவில்<br>04.03.1986 | தோழர் மதன்லால்<br>திருமலை<br>04.03.1986 | தோழர் நிதி<br>அக்கரைப்பற்று<br>29.03.1985 | தோழர் குமார்<br>குருநகர்<br>18.03.1985 |





தோழர் ஐயா கண்ணாட்டி · சாரங்கன் முருங்கன் · தங்கேஸ் நானாட்டான்

இவர்களுடன் தோழர்கள் ரவி, சில்வா, பவா ஆகியோரும் 06.04.1988 இல் சகோதரப் படுகொலையில் பலியாயினர்





இளங்கோ களவாஞ்சிகுடி · கந்தசாமி திருமலை · கடாபி பலாலி

இவர்களுடன் தோழர்கள் சந்திரன், ஜெராட், தாஸ், கடாபி (திருமலை) ஆகியோரும் 03.04.1986 கடற் சமரில் பலியாயினர்

### கந்தன் கருணை படுகொலை 30 மார்ச் 1987

**யாழ் மண்ணில் புலிகள் நிகழ்த்திக் காட்டிய சிறைப்படுகொலை இதுவாகும். இதன் போது எமது தோழர்கள், மாற்று இயக்கப் போராளிகள், பொதுமக்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்த 60 பேர் வரை கொல்லப்பட்டதாக சம்பவத்தில் உயிர் பிழைத்தவர்கள் தெரிவித்துள்ளனர். அன்று பலியான எமது தோழர்களில் சிலர்.**








| | | | | | |
|---|---|---|---|---|---|
| கதிர்<br>கிளிநொச்சி | ஈஸ்வரன்<br>யாழ்ப்பாணம் | மஜித்<br>கந்தர்மடம் | செல்வன்<br>மயிலிட்டி | தாசன்<br>மயிலிட்டி | அன்பரசன்<br>மலையகம் |

## தோழர் இந்திரன் வாழ்வும் மரண . . .

1 ம் பக்கத் தொடர்ச்சி

அண்மைக்காலத்தில் அவர் தனது மனைவி மகனுடன் சென்னையில் வசித்துவந்த போதும் கட்சியின், தோழர்களின் நினைவுகளோடும், எதிர் காலம் குறித்த கனவுகளோடும் அல்லாடிக கொண்டிருந்த ஒருவர். கட்சி நடவடிக்கைகளில் பங்கெடுக்க வேண்டும் என்ற அவாவோடும் அத ற்குத் தடையாய் அமைந்த தனது இயலாமை கள் குறித்த மனக் குமுறலோடும் நாளும், பொழுதும் போராடிக்கொண்டிருந்த தோழர் இந்திரன் தனது சொந்த இடத்திற்கு திரும்பும் முன்னரே உயிரை விட்டது சோகம் மிக்கதாகும்.

1986 இல் புலிகளின் அச்சுறுத்தலில் இருந்து தப்பிக்க தோழர் இந்திரன் இந்தியா சென்றார். அவரது உழைப்பால் இலாபமடைந்தவர்கள் பின்னர் அவரை உதாசீனப்படுத்தினர். வுஞ்சித தனர். இதனால், அவரது வாழ்வு திசைமாறிச் சிதைந்து, இளம் வயதிலேயே உயிரிழப்பில் முடிந்திருக்கிறது. சுமார் 30 வருடங்கள் எமது உயர்விலும், தாழ்விலும் தொடர்புபட்டிருந்த அவரது போராட்ட வாழ்க்கையும், வாழ்க்கை போராட்டமும் முற்றுப்பெற்றுவிட்டது.

ஒவ்வொரு மனிதனுக்கும் பலமும், பலவீனமும் உண்டு. தோழர் இந்திரனுக்கிருந்த பலவீனங் களை விலக்கிவிட்டுப்பார்த்தால் சமூக அவலங களின் மீது கோபமும் அவற்றை மாற்ற வேண் டும் என்ற ஆக்ரோசமும் அவருள்ளே கனன்று கொண்டிருந்தது. பல்வேறு இன்னல்களுக்கு உள்ளானபோதும் ஒரு பகுத்தறிவாளனாகவே எப்போதும் வாழ்ந்தார். பாதகம் செய்பவரை மோதி மிதித்துவிட வேண்டும் என்ற கடுமையும் துன்பத்தில் சாதல் கண்டு, துயர்ப்படும் கருணை உள்ளமும் அவருக்கிருந்தது.

தமிழ் பேசும் மக்களின் விடிவிற்கான போராட் டத்தில் பங்கெடுத்ததால் நெருக்கடிகளுக்கு உள்ளாகி சின்னாபின்னப்பட்டுப் போன குடும்ப ங்களில் தோழர் இந்திரனின் குடும்பமும் ஒன்றாகும்

தோழர் இந்திரனை தொடர்ந்து அவரது சகோதரர் ஒருவர் 1989 இல் ஈ.பிஆர்எல்எவ் இல் இணைந்து செயற்பட்டார்.

இதனால் 1990 இல் அவரது தந்தை, தாய் மற்றும் சகோதரர்கள் புலிகளால் இந்தியாவுக்கு நாடுகடத்தப்பட்டார்கள். உற்ற சுற்றத்தை பிரிந்த தொழில் வாய்ப்பை இழந்த நிலையில் அங்கேயே அவர்கள் உயிரிழக்கவும் நேர்ந்தது.

அவரது மற்றொரு சகோரர் அதே ஆண்டில் புலிகளால் கடத்தப்பட்டு காணாமல்போகச் செய்யப்பட்டார்.

இவை அனைத்துக்கும் மத்தியிலும் தனது பால்ய நண்பனும், கட்சித் தோழனுமான தோழர் றொபேட் அவர்களின் படுகொலைக்கு எதிரான ஆவேசம் தோழர் றொபேட்டின் சமூகப் பணிகள் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் என்கின்ற ஆசை தோழர் இந்திரனின் மனதை உறுத்திக் கொண்டிருந்த சங்கதிகளாகும்.

நண்பா! உன் வாழ்வும் மரணமும் கற்றுத்தந் திருக்கிறது. எதைச் செய்ய வேண்டும் என்ப தையும் எதைச் செய்யக் கூடாது என்பதையும் உன்னிடமிருந்து கற்றுக்கொண்டிருக்கிறோம். உனது நினைவுகள் எமக்கு சுமையில்லை. உனது நினைவுகளையும், கனவுகளையும் சுமந்தபடி தான் எங்கள் பயணம் தொடரும்.

## சர்வதேச பெண்கள் தினம் ...

1 ம் பக்கத் தொடர்ச்சி

பெண்களுக்கு 30 வீத நாடாளுமன்ற ஒதுக்கீடு இந்தியாவின் மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இலங்கையில் 2 வீதமான பெண்கள் கூட பாராளுமன்றத்தில் இல்லை என்பது வேறு கதை.

சமூக பொளாதார வாழ்விலும் அரசியலிலும் சம பங்குதாரர்கள் ஆவதற்கான அடிப்படை மாற்றங்கள் நிகழ்ந்தாக வேண்டும்.

ஆபிரிக்க, ஆரேபிய நாடுகளில் நிகழும் கிளர்ச்சிகளில் குறிப்பாக எகிப்தில் நடத்தப்பட்ட ஜனநாயகப் பேரியக்கத்தில் பெண்களின் பங்கு முக்கியமானது.

அந்த எழுச்சிகள் மத அடிப்படைவாதத்தை கொண்டிருக்கவில்லை.

பெங்களூரில் இரவு உணவு விடுதிக்குச் சென்ற பெண்கள் தாக்கப்பட்டதை கேள்விப்பட்டிருப்பீர்கள்.

இந்த காட்டுமிராண்டித்தனத்தை இந்தியாவின் அனைத்து ஊடகங்களுமே கண்டித்தன.

பிரேமானந்தா வகையறா போலிச் சாமியார்களின் பெண்களை இழிவு படுத்தும் சித்து விளையாட்டுகளுக்கெதிராகவும் பாரிய இயக்கங்கள் நடத்தப்படுகின்றன.

இலங்கையின் ஆடைத் தொழில்துறையில் ஈடுபட்டிருக்கும் குறை ந்த கூலி பெறும் பெண் தொழிலாளர் பட்டாளத்தின் நிலையும், மலையகத் தோட்டத் தொழிலாள பெண்களின் நிலையும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். இவர்களின் வாழ்க்கைத் தரம் இலங்கையின் சராசரி வாழ்க்கைத் தரத்தை விட கீழானது. வீடு, தொழில் பாதுகாப்பு, சுகாதாரம் கல்வியின்மை, போசாக்கி ன்மை என்பன இங்கு பாரிய பிரச்சினைகள்

தொழிற்சாலைகளில் வங்கிகளில் ஆஸ்பத்திரிகளில் ஏன் போக்கு வரத்தில் பெண்கள்மீதான பாலியல் சார்ந்த துஸ்பிரயோகங்கள் அதிகமாகவே நடை பெறுகின்றன. இதனை பல சந்தர்ப்பங்களில் நேரிடையாகவே அவதானிக்க முடியும்

இதை விட யாழ்ப்பாணத்தில் அரச அலுவலகங்களில் வேலை செய்யும் பெண்கள் சேலை அணிய வேண்டும் என்று அரசாங்க அதிபர் சொன்னதாக ஒரு செய்தி இதற்கு முன்னர் நல்லூர் கோயிலுக்கு வரும் பெண்கள் சேலை அணிந்து வர வேண்டும் என்று மாநகரசபை முதல்வரால் அறிவுறுத்தப்பட்டு அது ரத்துச்செய்யப்பட்டது. இவ்வாறான கருத்துக்கள் ஒருவருடைய உடைத்தேர்வு தொடர்பான ஜனநாயகப் பிரச்சினையாகும். தென் னாசியாவில் 30 வீதத்திற்கு மேற்பட்ட பெண்கள் சுரிதார் அணி கிறார்கள் அவர்களை நிந்தனை செய்வதுமாகும் .

ஆண்களின் அத்துமீறலுக்கு காரணம் பெண்களின் நடை உடை பாவனைகளே என்ற பத்தாம் பசலி ஆணாதிக்க எண்ணப்பாடு இன்றளவில் எமது சமூகத்தில் நின்று நிலவுகிறது. பெண்கள் தொடர்பாக எமது சிந்தனை முறையிலும், சமூகச் செயற்பாடு களிலும் மாற்றங்கள் தேவை.

அதற்கு சுதந்திரமான பிரக்ஞையுள்ள பெண்கள் இயக்கங்கள் தோன்ற வேண்டும். இப்போது சில பெண்கள் நலன்சார்ந்த அரசசார்பற்ற அமைப்புகள் இயங்குகின்றன. அவை மாத்திரம் போதாது. வரலாற்றின் தேவை இது.

www.padippakam.com



# அரசியற் தீர்வு – அதிகாரப் பகிர்வு

## தெளிவற்ற பாதையில் குறிக்கோளற்ற பேச்சுவார்த்தை

**தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கு அரசியல் தீர்வுக்கு ஆதரவான இடதுசாரிகளோடும் உறவில்லை சிங்கள மக்கள் மத்தியிலுள்ள ஏனைய ஜனநாயக முற்போக்கு சக்திகளோடும் உறவில்லை. முஸ்லிம் மக்கள் மற்றும் மலையக மக்களின் தலைவர்களோடும் எந்தவிதமான உடன்பாடும் இல்லை. ஏனைய தமிழ் சமூக அரசியற் சக்திகளோடும் பரஸ்பரமான கருத்து ரீதியான ஒற்றுமை இல்லை. இந்திய தலைவர்களிடமிருந்து அரசியல் ரீதியான அனுசரணையும் இல்லை.**

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக பேச்சுவாத்தைக்குப் போவதற்கு முதலிலும் பின்னரும் நேரத்துக்கு ஒரு விதமாக ஒன்றுக்கு ஒன்று முரணான அறிக்கைகளை பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் அரசு தரப்பினரும் வெளியிட்டு வருகிறார்கள். அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையில் மூன்று சுற்று நான்கு சுற்று என அவ்வப் போது பேச்சுவாத்தைக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகள் தொடரும் என இரு பகுதியினராலும் கூறப்படுகிறது. இந்தப் பேச்சுவார்த்தைக் கூட்டங்கள் ஏதாவது நம்பிக்கையைத் தரும் விதமாக அமைகிறதா இல்லையா? அல்லது உலகையும் மக்களையும் ஏமாற்றும் அரசியல் வித்தைகள் நடைபெறுகிறதா? என்பதே இப்போது இலங்கை மக்கள் முன்னாலுள்ள கேள்விகளாகும்.

தந்தை செல்வா, தலைவர் அமிர்தலிங்கம், வரதராஜப்பெருமாள், பாலசிங்கம் என கடந்த காலங்களில் தமிழர்களின் கோரிக்கைகளுக்கான பேச்சுவாத்தைகளை அரசுடன் முன்னெடுத்து வந்த காலம் போய் இப்போது கனகேஸ்வரன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் தமிழர்களின் கோரிக்கைகளுக்கான பேச்சுவாத்தைகளின் பிரதானமானவர்களாக உள்ளனர்.

யார் குற்றியாயினும் அரிசியாகினால் நல்லதே! ஆனால் இது அரிசி ஆகுமா? என்பதே பிரச்சினையாக உள்ளது. வெற்றிகரமாக அரிசியாகுமா? எப்போது அது ஆகும்? என்ற கேள்விகள் ஒருபுறம் இருக்க, அரிசியாகும் விதத்தில் சரியாகவும் உரிய முறையாகவும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றனவா என்பனவும் இங்கு கேள்விகளாகும்.

பாலசிங்கத்தைக் கொண்டு பிரபாகரன் நடத்திய பேச்சுவார்த்தைகளெல்லாம் யுத்தத்தைத் தொடர்ந்தும் கொண்டுசெலுத்தும் தயாரிப்புக்களுக்காக மேற்கொள்ளுதல், ஏனைய தமிழ் இயக்கங்களை அழித்தல், தேசியரீதியாகவும் சர்வதேசியரீதியாகவும் புலிகளின் பயங்கரவாதத்துக்கு ஓர் அரசியல் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல் போன்ற வேறு உள் நோக்கங்களைக் கொண்ட நாடகங்களாகவே இருந்ததை இப்போது அனைவரும் புரிந்து கொண்டிருக்கின்றனர். அதே போலத்தான் இப்போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தாம் அவ்வப்போது எதிர்நோக்கும் தேர்தல்களில் அதிகப்படியான வாக்குகளை தமிழர்களிடமிருந்து வென்றெடுப்பதற்காக இந்தப் பேச்சுவார்த்தைகளை நடாத்துகிறார்களா? வெளிநாடுகளில் உள்ள புலிப் பிரமுகர்களை திருப்திப் படுத்தும் விதமாக இந்தப் பேச்சுவார்த்தைகளை ஒரு முடிவேயில்லாமல் கொண்டு செல்லும் முடிவோடு செயற்படுகிறார்களா? என்பதே இங்குள்ள பிரதான சந்தேகங்களாகும்.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமதென ஒரு அரசியற் தீர்வுக் கோரிக்கையை ஓர் அடிப் படைத் திட்ட வரைவு வடிவில் மக்கள் முன் வைக்கவில்லை. இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் தமக்குள் ஏதேனும் அடிப்படை உடன்பாடு கொண்டிருப்பதாகவும் தெரியவில்லை. ததேகூவிலுள்ள ஒரு பகுதியினர் 13வது திருத்தத்தை ஏற்கமாட்டோம் என்கின்றனர். இன்னொரு பகுதியினர் தேசியம், தாயகம், சுயநிர்ணய உரிமை என்பன முதலில் அரசினால் அங்கீகரிக்கப்படுவது அவசியம் என்கின்றனர். இந்த இரண்டாவது வகையினர் இந்த மூன்றையும் அங்கீகரிக்காத தமிழ்க் கட்சிகளோடு ஒற்றுமையே கூடாது என்னும் அளவுக்கு கடும் புலி நிலைப்பாட்டைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். அவ்வாறானால் எவ்வாறானதொரு அரசியற் தீர்வுக்கு ததேகூவின் மிதவாத அரசியற் தலைவர்கள் மற்றவர்களால் அனுமதிக்கப் படுவார்கள்

அரசாங்கமோ! 13வது திருத்தத்துக்கு அப்பால் எதுவுமில்லை என்று மட்டுமல்லாது 13வது திருத்தப்படி கூட பொலிஸ் அதிகாரங்களோ அல்லது நிலங்களின் மீதான அதிகாரங்களோ வழங்கப்பட மாட்டாது என்று மீண்டும் மீண்டும் கூறுவதோடு 13வது திருத்தத்திலுள்ள ஒவ்வொரு சரத்தையும் மத்தியிலிருந்து மாகாணங்களுக்கு அதிகாரம் பகிரப்படாமல் இருக்கும் வகையாக நடைமுறைப்படுத்தும் விதமாகவே நடந்த கொள்கிறது. ஜனாதிபதி மஹிந்தவும் அவரது பல அமைச்சர்களும் இலங்கையில் இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லையென்று அடித்துக் கூறுகின்றனர். அது மட்டுமல்லாது மொரட்டுவ தொடக்கம் நீர் கொழும்பு வரையுள்ள கரையோரப் பகுதியில் தமிழர்களும் முஸ்லிம்களும் பெரும்பான்மையாக வாழ்வதனால் இலங்கையின் அரசாங்க விவகாரங்களில் சிறுபான்மையினர்கள் உள்ளடக்கப் படவில்லை என்று ஒரு பிரச்சினை இல்லவே இல்லை என ஜனாதிபதி உணர்ச்சி வசப்பட்டுக் கூறுகிறார். ஜனாதிபதியின் பக்கபலமாக இருக்கும் விமல்வீரவன்ச போன்றவர்களோ! யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகவே யுத்த காலத்தில் தாம் அரசியற் தீர்வுக்கு ஒத்துக் கொண்டதாகவும் இப்போது யுத்தம் வெல்லப் பட்டுவிட்டதால் அரசியற் தீர்வு என்ற விடயமே அவசியமில்லை என்கின்றனர்

மேலைத் தேய நாடுகள் வெவ்வேறு தமது காரணங்களுக்காக யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் எனப் பலவற்றைக் கூறினாலும் அவை எதுவும் உருப்படியாக ஆக்கபூர்வமாக ஒரு நியாயமான அரசியற் தீர்வுக்கு உரிய முறைகளில் இலங்கை அரசை இணங்க வைப்பதற்கான எந்த முயற்சியையும் எடுக்கிறார்கள்

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமதென ஒரு அரசியற் தீர்வுக் கோரிக்கையை ஓர் அடிப் படைத் திட்ட வரைவு வடிவில் மக்கள் முன் வைக்கவில்லை. இது தொடர்பாக தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் தமக்குள் ஏதேனும் அடிப்படை உடன்பாடு கொண்டிருப் பதாகவும் தெரியவில்லை. ததேகூவிலுள்ள ஒரு பகுதியினர் 13வது திருத்தத்தை ஏற்கமாட்டோம் என்கின்றனர். இன்னொரு பகுதியினர் தேசியம், தாயகம், சுயநிர்ணய உரிமை என்பன முதலில் அரசினால் அங்கீகரிக்கப்படுவது அவசியம் என் கின்றனர். இந்த இரண்டாவது வகையினர் இந்த மூன்றையும் அங்கீகரிக்காத தமிழ்க் கட்சிகளோடு ஒற்றுமையே கூடாது என்னும் அளவுக்கு கடும் புலி நிலைப்பாட்டைக் கொண்டவர்களாக இருக் கிறார்கள். அவ்வாறானால் எவ்வாறானதொரு அரசியற் தீர்வுக்கு ததேகூவின் மிதவாத அரசியற் தலைவர்கள் மற்றவர்களால் அனுமதிக்கப் படுவார்கள்**



என்றில்லை, இனியும் எடுப்பார்கள் என எந்த அறிகுறியும் இதுவரை தெரியவில்லை.

இந்திய அரசாங்கமோ! இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தம், 13வது திருத்தத்துக்கும் மேலான அதிகாரப் பகிர்வு எனப்பலவாறாக அவ்வப்போது அறிக்கை விடுத்தாலும் அதற்கான எந்தவொரு உறுதியான திட்டவட்டமான முயற்சியையும் இந்தியா இப்போதைக்கு மேற்கொள்ளத் தயாராக இல்லை என்றே தெரிகின்றது. இந்தியாவானது இலங்கை அரசுடன் எந்த வகையிலும் இன்னொரு முறை சிக்கலான வகையில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் நெருக்கடியான உறவுநிலை ஏற்படுவதை விரும்பவில்லை. இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா, ததேகூ தலைவர்களுக்கு எந்த அறிவுரையையம் கூறியிருக்கலாம், ஆனால் அந்த அறிவுரை தொடர்பாக எந்த நடவடிக்கையிலும் இந்திய அரசு காத்திரமாக ஈடுபடாது என்பது வெளிப்படையானதொரு விடயமாகும்.

தமிழ்நாட்டு அரசியல் நிலைமையோ! அதன் தலைவர்கள் எப்போதும் சிங்களத் தலைவர்களோடு தீண்டத்தகாதார் எனும் வகையான உறவைப் பேணும் நிலையையே கொண்டிருக்கின்றது. சிங்களத் தலைவர்களோடு பேசினால் குற்றம்! சிங்களத் தலைவர்களை தமிழ்நாட்டுக்கு வரவேற்றால் தப்பு என்ற நிலையையே பேணி வருகிறார்கள். இந்நிலையில் தமிழ்நாட்டுத் தலைவர்கள் சிங்களத் தலைவர்களோடு நல்ல உறவுகளை ஆக்குவார்களா? சிங்களவர்களுக்குள் தமிழ்நாடு தொடர்பாக நிலவும் அச்சத்தைப் போக்குவார்களா? சகோதரத்துவம் சமத்துவம் சமரசம் ஆகிய அடிப்படைகளில் சிங்களத் தலைவர்களோடு ஓர் அந்நியோன்யத்தைப் பேணி வளர்ப்பார்களா? இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் நியாயம் கிடைக்கும் வகையாக தமிழ்நாட்டுத் தலைவர்கள் செயற்படுவதற்கு மேற்குறிப்பிட்ட மூன்றும் அவசியங்களாகும். ஆனால் இன்னும் சில தசாப்தங்களுக்கு அதற்கான வாய்ப்புக்கள் மிக அரிதாகவே உள்ளன. இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை தமிழக அரசியலில் ஒரு பிரச்சார விடயமாக இருப்பது மட்டுமல்லாது தமிழர்களுக்கு எந்த நியாயத்தையும் வழங்கி விடக்கூடாது என்ற போக்கை சிங்கள மக்கள் மத்தியில் மேலும் மேலும் வளர்ப்பதாகவே தமிழ்நாட்டு அரசியல் இப்போது இருக்கிறது. அதற்கும் மேலாக இலங்கைத் தமிழ் அரசியற் சக்திகளும் தமிழகத் தலைவர்கள் தமிழர்களுக்கான ஓர் நியாயமான அரசியற் தீர்வைப் பெற்றுத் தர வேண்டுமென்று விரும்புகிறார்களா? அல்லது தமிழகத் தலைவர்களால் தமக்கு எப்படிப் பார்த்தாலும் நட்டம்தான் ஏற்படும் என்று கருதுகிறார்களா? என்பதும் தெளிவற்றதொரு விடயமாகும்.

இந்தியா புலிகளை ஒழிப்பதிலும் சர்வதேச நாடுகளின் நெருக்கடிகளிலிருந்து இலங்கை அரசுத் தலைவர்களைப் பாதுகாப்பதிலும் தற்போதைய இந்திய அரசாங்கம் தீர்மானகரமாகப் பங்கு வகித்தமை அனைவரும் அறிந்த ஒன்றே. ஆனால், அவ்வாறான இந்திய அரசாங்கத்தின் மிகப் பிரதானமான தலைவரான சோனியா காந்தி தமிழர்களுக்கு சமத்துவம் மற்றும் சம உரிமைகள் வழங்கும் வகையாக இலங்கையின் அரசியல் யாப்பு மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்று ஒரு தேர்தற் பிரச்சார கூட்டத்திற் கூறியதைக் கூட ஜீரணிக்க முடியாமல் சிங்கள இனவாத சக்திகள் எதிர்ப்புக் குரல்கள் எழுப்புகிறார்கள். சிங்கள இனவாத சக்திகளின் குரல்களுக்கே மிகுந்த முக்கியத்துவம் தரும் ஜனாதிபதி மஹிந்த அந்த சக்திகளைப் புறக்கணித்து விட்டு ஒரு நியாயமான முற்போக்கான அதிகாரப் பகிர்வை வழங்கும் நடவடிக்கைகளில் அக்கறை காட்டுவரா என்பதில் இன்னமும் நம்பிக்கைகள் தோனிக்கவில்லை.

ஏன் வெளிநாடுகளிலுள்ள தமிழ்ப் பிரமுகர்களும் யாழ்ப்பாணத் தமிழ்ப் பிரமுகர்களும் கூட சோனியாகாந்தி அவர்களின் உரையை ஒரு சாதகமாகப் பார்க்காமல் அவர் பற்றி தமிழர்கள் மத்தியில் கிண்டலையும் கேலியையும் பரப்புவதிலேயே அக்கறை காட்டுகின்றனர். இது தொடர்பாக ததேகூவினரும் எதுவும் வாய் திறக்காமல் இந்தப் போக்கில் குளிர்காய்வதிலேயே சுகம் காணுகின்றனர். புலிப்பிரமுகர்களால் மேற்கொள்ளப்படும் இந்திய எதிர்ப்புப் பிரச்சாரம், காங்கிரஸ் விரோத பிரச்சாரம், கருணாநிதி விரோத பிரச்சாரம் தமிழர்களுக்கு நல்லதா கூடாதா என்று ததேகூவினர் தமது ஆதரவு சக்திகளுக்கு எந்த விதமான வழிகாட்டுதலையும் வழங்குவதில்லை. அப்படியானவர்கள் எப்படி இந்தியா தமிழர்களுக்கான அரசியற் தீர்வுக்கு உதவ வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள் என்றுதான் புரியவில்லை.

சிங்கள மக்கள் மத்தியில் ஒரு நியாயமான அரசியல் அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவாக பெருமளவான முற்போக்கு ஜனநாயக சக்திகள் உள்ளனர். அவ்வாறானவர்கள் அரசாங்கத்துக்கு வெளியே மட்டுமல்ல அரசாங்கத்திலும் அமைச்சர்களாக பலர் இருக்கிறார்கள். அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவாக கணிசமான எண்ணிக்கையில் புத்த பிக்குகளும் இருக்கிறார்கள். கிறிஸ்தவ சிங்களவர்களிற் பெரும்பான்மையானோர் அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவானவர்களே. ஆனால், இவர்களில் எந்தப் பகுதியினருடனும் அரசியல் பூர்வமான உறவு எதுவும் ததேகூ வினருக்குக் கிடையாது. இவர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதில் ததேகூவினர் எந்தவிதமான முயற்சிகளையும் மேற்கொள்வதாயும் இல்லை.

ததேகூவினர் ஏனைய சிறுபான்மைத் தேசிய இனங்களின் பிரதான கட்சிகளான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றுடன் கண்ட இடத்தில் கதைத்தல் கைகுலுக்குதல் என்பதற்கு அப்பால் வேறெந்த வகையிலும் அரசியல் தீர்வு மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பாக எந்தவொரு உடன்பாட்டையும் அவர்களுடன் எட்டுவதற்கான முயற்சி எதனையும் முன்னெடுப்பதாக இல்லை.

லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி அவற்றுடன் சில சில வட்டாரங்களில் மட்டும் செல்வாக்குப் பெற்ற இடதுசாரிக் குழுக்கள் என பல உள்ளன. இக்கட்சிகள் மற்றும் குழுக்கள் அனைத்தும் ஒரு நியாயமான அரசியற் தீர்வை வேண்டி நிற்பவை. ஆனாலும் இந்த சக்திகளோடு ததேகூவினருக்கு எந்தவிதமான தர்க்க ரீதியான அரசியல் உறவு எதுவும் கிடையாது. ஏன்! ஜேவிபி கூட அதிகாரப் பகிர்வு தொடர்பாக சாதகமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்காவிட்டாலும் தமிழர்கள் மற்றும் தமிழ்ப் பிரதேசங்களுக்கான புனர்வாழ்வு புனர்நிர்மாணம் மற்றும் வடக்கு கிழக்கில் உள்ள இராணுவப் பிரசன்னம் ஆகியன தொடர்பாக சாதகமான நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றது. ஆனாலும், சரத் பொன்சேகாவை ஜனாதிபதியாக்குவதற்கு ஜேவிபியுடன் சேர்ந்து கடும் முயற்சிகள் எடுத்த ததேகூவினர் தமிழர்களுக்கு சாதகமான விடயங்களிலாயினும் ஜேவிபியுடன் ஒரு குறிப்பிட்ட உறவைப் பேணுபவர்களாக இல்லை.

தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கு அரசியல் தீர்வுக்கு ஆதரவான இடதுசாரிகளோடும் உறவில்லை, சிங்கள மக்கள் மத்தியிலுள்ள ஏனைய ஜனநாயக முற்போக்கு சக்திகளோடும் உறவில்லை, முஸ்லிம் மக்கள் மற்றும் மலையக மக்களின் தலைவர்களோடும் எந்தவிதமான உடன்பாடும் இல்லை. ஏனைய தமிழ்ச் சமூக அரசியற் சக்திகளோடும் பரஸ்பரமான கருத்து ரீதியான ஒற்றுமை இல்லை, இந்தியத் தலைவர்களிடமிருந்து அரசியல்ரீதியான அனுசரணை இல்லை. சர்வதேச சமூகத்துக்கு தமது கோரிக்கைகளை தெளிவாகவும் திட்டவட்டமாகவும் முன்வைக்க முடியாமல் இருக்கின்றார்கள்.

இப்படிப்பட்ட ததேகூவினர் எப்படி ஒரு நியாயமான அரசியற் திர்வுக்கு - அதிகாரப் பகிர்வுக்கு வழி வகுக்கப் போகிறார்கள். தமிழ் இனவாதமும் சிங்கள இனவாதமும் இன்னமும் முட்டி மோதும் முறை மூலம் தமிழர்களுக்கு ஏதும் பயன் எப்போதாயினும் கிடைக்குமா? தமது பிரதிநிதிகளின் பேச்சுவார்த்தைகளால் தமிழர்களுக்கு நிச்சயம் தீர்வு கிடைக்கும் என்று ததேகூவின் பிரமுகர்களாலும் அதன் தீவிர ஆரவாளர்களாலுமே கூற முடியாத போது தமிழ் மக்கள் எப்படி நம்பிக்கை கொண்டிருப்பார்கள்.

அடுத்து ஒரு தேர்தல் வரும் போது வாக்குகள் தாருங்கள், வெற்றிகரமாக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எமது கரங்களை பலப்படுத்துங்கள் என்று வாக்குக் கேட்க உதவுவதற்கப்பால் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் வேறு பயன் எதனையும் எட்டும் என்பதற்கான அறிகுறிகள் எதனையும் காட்டும் அரசியல் வல்லமை ததேகூவினரிடம் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படியொரு நோக்கம் அவர்களுக்கு இருக்கிறதா என்பது கூட இங்கு ஒரு முதற் கேள்வியாகும்

நியாயமான அரசியற் கோரிக்கைகளை வென்றெடுக்கும் சாத்தியங்களுக்கான சரியான பாதைகளால் தெளிவான அணுகுமுறைகளுடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இல்லையென்றால் பேச்சவார்த்தைகள் எத்தனை வட்டம் சுற்றினாலும் தொடங்கின இடத்தில் இருந்து அது நகராது.

படிப்பகம்

www.padippakam.com



# மனித குலத்திற்கு அச்சுறுத்தலாகி விட்ட அணுசக்தி

அணு மின் நிலையம் ஒன்றை நிறுவத் திட்டமிட்டிருந்த சுவிட்சர்லாந்து அத்திட்டத்தை முழுமையாக கைவிட்டு விட்டதாக அறிவித்துள்ளது. ஜெர்மனியில் உடனடியாக 1980 க்கு முன்பு நிர்மாணிக்கப்பட்ட 7 அணுமின் உலைகள் மூடப்பட்டுள்ளன. ஜெர்மனியின் பாராளுமன்றத்தில் அரசியல் கட்சிகளுக்கிடையில் அணுமின் உலைகள் தொடர்பாக வாதப்பிரதிவாதங்கள் நடந்துவருகின்றன. பசுமைக்கட்சியினர் (Green Party) எதிர்வரும் 2017 ஆம் ஆண்டுடன் சகலவிதமான அணுமின் உலைகளும் மூடப்பட்டு இயற்கையான முறையில் மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டும் என்று கோரி வருகின்றனர். பிரதான எதிர்க்கட்சியான எஸ். பி. டி. யும் அது தொடர்பான ஆதரவுப் போக்கை கொண்டிருக்கின்றது. ஆளும் கட்சியான சி.டி.யு ஜெர்மனி மட்டும் அணு மின் நிலையங்களை மூடுவதினால் பயனில்லை. ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் இணைந்து பொது உடன்படிக்கையின் அடிப்படையில் அனுமின் உலைகளை குறைக்கும் அல்லது இல்லாமல் செய்யும் உடன்பாடுகளை எட்டவேண்டும் எனத் தெரிவித்திருக்கிறது. இதுவரை மின்சார உற்பத்திக்கு அணுமின் உலைக் கட்டுமானத்தை உருவாக்கிய 35க்கு மேற்பட்ட நாடுகளில் 450க்கு அதிகமான அணுமின் உலைகள் உள்ளன. அணுமின் உலைகளை அதிகமாக வைத்திருக்கும் நாடு அமெரிக்காவாகும். அதில் 19 வீதமானவை மட்டுமே மின் உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படுகின்றன. ஜப்பானில் மொத்தம் 53 அணுமின் உலைகள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பானில் மார்ச் 11 ம் திகதி, 8.9 ரிக்டர் அளவிலான பூகம்பம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து இராட்சத சுனாமி அலைகள் ஜப்பானை தாக்கியது. இதனால் ஜப்பானின் வடகிழக்கு



பகுதியில் அமைந்துள்ள புகுசிமா டாக்சி அணு மின் நிலையத்திலுள்ள 6 அணுமின் உலைகளில் இதுவரை 4 அணுமின் உலைகள் வெடித்து அணுக்கதிர்வீச்சு வெளியாகி வருகின்றது. இதனால் ஜப்பானில் மட்டுமல்ல ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியங்களும் அணுக்கதிர் வீச்சின் தாக்கங்களுக்கு உள்ளாகலாம் என்று அஞ்சப்படுகின்றது. ஜப்பானின் நில நடுக்க பாதிப்பு பற்றி சர்வதேச அணுசக்தி நிலையம் இரண்டு வருடங்களுக்கு முன்பே எச்சரிக்கை விடுத்ததாகவும் தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜப்பான் கடந்த 65 ஆண்டுகளில் சந்தித்திராத பேரழிவை சந்தித்துக்கொண்டிருக்கின்றது. இரண்டாம் உலகப்போரின் போதே ஜப்பான் மிகப்பெரும் அழிவைச் சந்தித்தது ஹிரோசிமா, நாகாசாகி போன்ற நகரங்களில் அமெரிக்கா போட்ட அணு குண்டுகளினால் இன்னும் கூட அதன் தாக்கங்கள், பாதிப்புக்கள் உணரப்படும் நிலையில் இன்னுமொரு பேரவலம் நிகழ்ந்திருக்கின்றது

ஜப்பானில் அண்மையில் எற்பட்ட பூமியதிர்ச்சியானது உலக நாடுகள் அனைத்தினதும் அணு ஆயுதங்களை விட 1000 மடங்கு சக்தியினை வெளிவிட்டதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர். இப் பூமியதிர்ச்சியானது 6.7 டிரில்லியன் தொன்கள் வெடி பொருட்களின் சக்திக்கு சமமானது என்று தெரிவித்துள்ளனர். ஒட்டுமொத்த ஜப்பான் தீவே 8 அடி தூரத்திற்கு நகர்த்தப்பட்டுள்ளதாகவும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

சுனாமியினால் சென்டாய் உள்ளிட்ட பல நகரங்கள் மூழ்கின. புக்குசிமா மியாகி, ஐவோட் போன்ற மாகாணங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டன ஜப்பானின் கரையோரப் பிரதேசங்கள் முழுவதும் சேறும் சகதியுமாக காட்சியளித்தன. சாலைகளில் வாகனங்கள், கெண்டெயினர்கள், வள்ளங்கள் பேன்றவை குப்பைகளாக மாறிக் கிடந்தன. இவ் அனர்த்தங்களினால் ஜப்பானில் 12 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் மரணித்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. இவ் எண்ணிக்கை 20 ஆயிரத்திற்கும் அதிகம் என்றும் நம்பப்படுகின்றது.

10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ளார்கள் இலட்சக்கணக்கான மக்கள் குடிநீர் உணவு மின்சாரம் என்பன இன்றி தவித்தார்கள். பாதிக்கப்பட்டோருக்கு ஜப்பான் அரசு போர்க்கால அடிப்படையில் உதவியளித்தது. பொருட்சேதம் அளவிட முடியாத அளவுக்கு உள்ளது. மீட்புப் பணிகள் வேகமாக நடைபெற்றது.. 80 ஆயிரம் பாதுகாப்பு படையினருடன் காவல் துறையினரும் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். நில நடுக்கம், சுனாமி மற்றும் அணுக்கதிர் வீச்சு அபாயம் இவற்றால் 15 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வசிப்பிடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு பாதுாப்பான இடங்களிற்கும், தற்காலிக முகாம்களிற்கும் அனுப்பப்பட்டனர். காட்சிகள் கண்ணீரை வரவைப்பவையாக உள்ளன. ஆயிரக்கணக்கில் பெற்றோரை இழந்தோர் குழந்தைகளைப் பிரிந்தோர், சகோதரர்களைத் தேடுவோர் என இம் மக்களின் துயரங்கள் பல.

70 க்கு மேற்பட்ட நாடுகள் ஜப்பானுக்கு பல்வேறுவகையில் உதவிகளை அளித்தன. குறிப்பாக ஜப்பானின் வட பகுதியிலுள்ள டூரிங் தீவுகளிலிருந்து 11 ஆயிரம் மக்களை ரசிய அரசு வெளியேற்றி பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பிவைத்தது. சீனாவும் மீட்புப் பணிக்கான பணியாளர்களை அனுப்பியது. அமெரிக்கா 144 மீட்பு பணியாளர்களுடன் 12 நாய்களையும் மீட்புப்பணிக்கென அனுப்பிவைத்திருந்தது.

> ஜப்பானில் அண்மையில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியானது உலக நாடுகள் அனைத்தினதும் அணு ஆயுதங்களை விட 1000 மடங்கு சக்தியினை வெளிவிட்டதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். ஜப்பான் கடந்த 65 ஆண்டுகளில் சந்தித்திராத பேரழிவை இப்போது எதிர்கொண்டிருக்கின்றது.

பூகம்பம், சுனாமி, அணு உலைகளின் வெடிப்பு என ஜப்பானில் ஏற்பட்டுள்ள துயரத்தினால் முழு உலகமுமே ஆடிப் போயுள்ளது. இதுவரை மின்சார உற்பத்திக்கு அணுமின் உலைக் கட்டுமானத்தை உருவாக்கிய 35க்கு மேற்பட்ட நாடுகளில் 450க்கு அதிகமான அணு மின் உலைகள் உள்ளன. அணுமின் உலைகளை அதிகமாக வைத்திருக்கும் நாடு அமெரிக்காவாகும். அதில் 19 வீதமானவை மட்டுமே மின் உற்பத்திசெய்ய பயன்படுத்தப்படுகின்றன. பிரான்ஸ் தனது அணு மின் உலைகள் மூலமாக 85 வீத மின் உற்பத்தியை செய்கின்றது. ஜப்பானில் மொத்தம் 53 அணுமின் உலைகள் உள்ளன இவற்றிலிருந்து 34.5 வீத மின்சாரம் உற்பத்தியாகின்றது. மிக அதிக அளவில் அணு உலைகளைக் கொண்டுள்ள நாடுகளில் ஜப்பான் 3 வது இடத்திலுள்ளது. இப்போது அணு மின் உலைகளின் பாதுகாப்பு கேள்விக்குறியானதைத் தொடர்ந்து ஒவ்வொரு நாடும் தங்கள் அணுமின் உலைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முயற்சிகளில் இறங்கியுள்ளன. ஜப்பானில் ஏற்பட்டுள்ள அணு மின் உலைகளின் வெடிப்பினால் அணுக்கதிர் வீச்சின் அபாயம் உள்ளதா என்பதை ஆசிய, அமெரிக்க மற்றும் ஐரேப்பா கண்டங்களிலுள்ள நாடுகள் மிக தீவிரமாக ஆய்வு செய்து வருகின்றன. ஏனெனில் அணுக்கதிர் வீச்சின் தாக்கத்தினால் மனிதர்கள் முதல் விலங்குகள், தாவரங்கள் மற்றும் சடப்பொருட்களும் கூட பாதிக்கப்படுவதுடன் மரணத்தை சம்பவிக்கச் செய்யக் கூடிய ஆபத்தும் உள்ளது. கதிர்வீச்சுப் பட்ட பயிர்கள் பொசுங்கும், மரங்கள் பட்டுப்போகும். ஜப்பானிலிருந்து வரும் பயணிகள் அணுக்கதிர் வீச்சால் பாதிக்கப்பட்டுள்ளனரா என விமான நிலையங்களில் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவதுடன் விமானங்கள் கூட அணுக்கதிர் வீச்சுத் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளதா என்று பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

அணு மின் நிலையம் ஒன்றை நிறுவத் திட்டமிட்டிருந்த சுவிட்சர்லாந்து அத்திட்டத்தை முழுமையாகக் கைவிட்டுவிட்டதாக அறிவித்துள்ளது. ஜெர்மனியில் உடனடியாக 1980 க்கு முன்பு நிர்மாணிக்கப்பட்ட 7 அணுமின் உலைகள் மூடப்பட்டுள்ளன. ஜெர்மனியின் பாராளுமன்றத்தில் அரசியல் கட்சிகளுக்கிடையில் அணு மின் உலைகள் தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் நடந்துவருகின்றன. பசுமைக்கட்சி (Green Party) எதிர்வரும் 2017 ஆம் ஆண்டுடன் சகல விதமான அணுமின் உலைகளும் மூடப்பட்டு இயற்கையான முறையில் மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டும் என்று கோரி வருகின்றது. பிரதான எதிர்க்கட்சியான SPD யும் அது தொடர்பான ஆதரவுப் போக்கை கொண்டிருக்கின்றது. ஆளும் கட்சியான CDU ஜெர்மனி மட்டும் முழுமையாக அணு மின் நிலையங்களை மூடுவதினால் பயனில்லை. ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் இணைந்து பொது உடன்படிக்கையின் அடிப்படையில் அணுமின் உலைகளை குறைக்கும் அல்லது இல்லாமல் செய்வதற்கான உடன்பாடுகளை எட்ட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்துள்ளது. கடந்த 20 வருடங்களுக்கு மேலாகவே அணுமின் நிலையங்களை ஜெர்மனியில் இல்லாமல் செய்வதற்கான எதிர்ப்பு இயக்கம் செயற்பட்டு வருகின்றது. அது மக்கள் மத்தியில் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு விழிப்புணர்வு போராட்டங்களை நடத்தி வந்திருக்கின்றது. ஜப்பானில் அண்மையில் ஏற்பட்ட நிகழ்வைத் தொடர்ந்து ஜெர்மனியில் பல பாகங்களிலும் மக்கள் தமது எதிர்ப்புக்களை தெரிவித்து வருகின்றார்கள். அண்மையில் ஸ்ருட்காட் நகரை அண்டியுள்ள பகுதியில் சுமார் 45 கிலோ மீட்டர் தூரம் வரையிலான மனித சங்கிலி போராட்டத்தை நடாத்தியுள்ளனர். இதில் 60 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் பங்கு கொண்டுள்ளனர்.

கடந்த நூற்றாண்டில் பல்வேறு இடங்களில் அணுமின் உலைகள் வெடித்துள்ளன. குறிப்பாக 1969 இல் சுவிட்சர்லாந்தின் லூசென் நகரிலும் 1979 இல் அமெரிக்காவின் த்ரீமைல் தீவிலும் 1986 இல் உக்ரெயின், செர்னோபிலிலும் அணு மின் நிலையங்களில் விபத்துக்கள் ஏற்பட்டன. இதனால் பல இலட்சம் மக்கள் உயிரிழந்துள்ளார்கள். இம்முறை ஜப்பானில் ஏற்பட்டுள்ள அணுமின் உலைகளின் வெடிப்பானது மேலும் மோசமானால் விளைவுகள் மிகவும் பாரதூரமானதாகவே அமையும் என்று அஞ்சப்படுகின்றது.

இந்த நூற்றாண்டின் பத்து வருடங்களுக்குள் உலகத்தில் பல பாகங்களிலும் இயற்கை அனர்த்தங்களையும் அழிவுகளையும் சந்தித்து விட்டோம். 2004 ஆம் ஆண்டு மார்கழி மாதம் இந்தியப் பெருங்கடலில் ரிக்டர் அளவில் 9 புள்ளிகள் கொண்ட பூகம்பம் ஏற்பட்டது இதைத் தொடர்ந்து இராட்சத சுனாமி அலைகள் இலங்கை இந்தியா உட்பட பல்வேறு நாடுகளை தாக்கியது அதில் 2 இலட்சத்துக்கு மேற்பட்டோர் பலியானார்கள் 2010 தை மாதம் கெய்தியில் ஏற்பட்ட பூகம்பத்தினால் சுமார் 3 இலட்சம் பேர் வரையில் பலியானார்கள் 2010 ஆவணியில் ஐஸ்லாந்தில் ஓர் எரிமலை வெடித்தது. ஐரோப்பிய வான்பரப்பே புகை மண்டலமாகியது. சர்வதேசத்துக்கான விமான போக்குவரத்துக்கள் இடைநிறுத்தப்பட்டன. ஐரோப்பா முழுவதுமே சில வாரங்கள் ஸ்தம்பிதமாகியது. 2010 - 2011 இல் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவில் ஏற்பட்ட நீண்ட கடும் குளிரும், பனியும் பயிர்ச் செய்கையில் ஈடுபட முடியாத பாதக நிலைமைகளை உருவாக்கின. அண்மையில் அவுஸ்திரேலியா பிரேசில் மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழையினால் பல இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்து அடுத்த வேளை உணவுக்காகக் கையேந்தும் நிலை ஏற்பட்டது. சொத்துக்கள், கால்நடைகள், பயிர்வகைகள் என அழிவுக்குள்ளாயின. இறுதியாக ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பம் முழு ஜப்பானிய மக்களையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. இவ் அபாயங்கள் ஜப்பானை தாண்டி ஏனைய நாடுகளையும் ஏன் கண்டங்களையும் தாண்டுமா? என்ற கேள்விகள் உலக மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது. உலகில் ஒரு புறம் யுத்தங்களும், வறுமையும் கோரத்தாண்டவமாட மறுபுறமோ இயற்கையின் சீற்றங்கள் மனித குலத்தை அழித்துக்கொண்டிருக்கின்றது. இவ்வகையான அனர்த்தங்கள் அழிவுகள் தொடர்பாக மக்கள் மத்தியில் பரந்த அளவில் விழிப்புணர்வு வளர்த்தெடுக்கப்பட வேண்டும். மனிதர்கள் நாம் எல்லோரும் ஏனைய மனிதர்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுப்பவர்களாயும், கரம்கோர்த்து செயற் படுபவர்களாயும் வாழப் பழகிக் கொள்வோமாக.



**ஜேர்மனியில் அணுமின் நிலையங்களை இல்லாமல் செய்வதற்கான எதிர்ப்பு நடவடிக்கையில் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பங்குகொண்ட 45 கிலோ மீற்றர் நீளமான மனிதச் சங்கிலி போராட்டத்தில் பங்குகொண்டுள்ள மக்கள்**

**வீ.ஏ.கே. ஜேர்மனி**

தி. சிறிதரன் 29ஏ, வாவிக்கரை வீதி, மட்டக்களப்பு அவர்களால் இல 119, பல்கலைக்கழக வீதி, இரத்தினப்பிட்டிய, பொரலஸ்கமுவ சி.ஆர்.சி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்